www.padippakam.com

தலித் ஆதரவு தரும் மனித உரிமை ஆணையம்

அக்டோபர் – 2001

# மக்கள் களம்

மாண்பைக் காக்கும் மாத இதழ்

# வரலாற்றுத் தவறுகளைச் சரி செய்வோம்!




ஐ.நா.வில் மேரி ராபின்சன்

ரூ.4.50

படிப்பகம்

www.padippakam.com

# சாதிக்கு

இந்தியாவின் சாதிய அவலட்சணத்தை
உலக அரங்கில்
வெளிச்சம் போட்டுக் காட்டுவதைத் தடுப்பதற்குத்
திரைமறைவில் தீவிரமாய் செயல்பட்டீர்கள்
ஆனால்
பட்டப்பகலில்
அதுவும் பொது இடத்தில்
அப்பாவி தலித் பெண்களை நிர்வாணப்படுத்தி ★
ஆட்டம் போடும் சாதிக்காரச் சாதனர்களைத்
தண்டிக்காமல் அமைதி காக்கின்றீர்கள்!

இனவெறிக்கெதிராக
இலவசமாக முழக்கமிடுகின்றீர்கள்
ஆனால்
சாதியை ஒழிப்போம் வாருங்களென்றால்
சங்கராச்சாரியார் மடமே கதியென்று ஓடுகின்றீர்கள்!
சுதந்திர தினத்தன்று
தலித்துகளுக்கு(ம்)சுதந்திரம் பிறப்புரிமையென்று
உணர்ச்சிவசப்பட்டு உளரிக் கொட்டுகின்றீர்கள்
ஆனால்
தலித்துகளின் குடிசைகளைச் சுதந்திரமாய் கொளுத்தி★★
தீபாவளி கொண்டாடிட சாதிக்காரர்களை மட்டும்
அனுமதிக்கிறீர்கள்!



உலக அரங்கில் ஆர்ப்பாட்டம்

# சமாதிகட்டும்வரை......

– பாதை வளன்.

இந்திய அரசின் உண்மை முகத்தை இன்னொரு முறை
டர்பனில் தோலுரித்துக் காட்டி விட்டீர்களே!
மாநாட்டிற்குள் மட்டுமே
மறைமுக ஆட்சி செலுத்த முடிந்தது உங்களால்
அரங்கத்திற்கு வெளியே
அவனியைக் கவர்ந்த சாதிக்கெதிரான பறைமுகத்தை
என்ன செய்ய முடிந்தது உங்களால்!

சாதி மலத்தை
மூட்டை மூட்டையாய் முதுகினில் சுமந்து கொண்டு
முகத்தில் மட்டும் அரிதாரம் பூசியவர்களாய்
உலக அரங்கில் நாடகமாடியது போதும்
சாதிய வி(வ)காரத்தை
உள்நாட்டுச் சங்கதியென்று மூடிமறைத்தது போதும்
அதிகாரத்தில் அமர்ந்துக்கொண்டு
சதி செய்தது போதும்!

ஒருதலைபட்ச முன்னேற்றத்திற்கு வித்திட்டு
ஒடுக்கப்பட்ட தலைமுறையையே நிர்மூலமாக்கிட
நவீன கணினியுகத்திற்குள்ளும்
இதிகாசகாலத்துச் சாதி வைரஸ்க்கு
நாரதர்களாய் நல்ல வரவேற்பு தந்து
ஆபத்தான விளையாட்டைத் தொடர்கின்றீர்கள்!
போராடும் பரம்பரையின் வாரிசுகள்
இன்றைய தலித்துக்கள்!
டர்பன் போராட்டம்
தலித் விடியலுக்கான போராட்டத்தில் ஒரு
நெருப்புத்துளி
சாதிக்குச் சமாதிக்கட்டும்வரை
தொடரும் தலித்துகளின் போராட்டம்!

★ ஆகஸ்டு 27, 2001 அன்று கர்நாடக மாநிலம் பெல்லாரி தாலுக்கா வாணியனூர் கிராமத்தில் திருமணமான பேரம்மா சாதிக்காரர்களால் செய்யாத குற்றத்திற்குப் பழி சுமத்தப்பட்டு, நிர்வாணப்படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார்.

★★ செப்டம்பர் 3, 2001 தஞ்சை மாவட்டம் அதிராமப்பட்டணத்தில் 30 க்கும் மேற்பட்ட தலித்துகளின் குடிசைகளைச் சாதிக்காரர்கள் தீயிட்டு கொளுத்தினர்.



படிப்பகம்

www.padippakam.com

**இனியொரு யுகம்செய்வோம்!**

தொகுப்பு : 02
இதழ் : 05

நிறுவன - ஆசிரியர்
எல். யேசுமரியான்

ஆசிரியர் குழு
சிந்தை ராஜன்
பட்டி தமிழ் விரும்பி
களப்பிரியா

உரிமை மற்றும்
வெளியிடுபவர்
ஜி. கோபிநாதன்
67, கெனால் தெரு,
சி.பி. ரோடு,
சென்னை-600 021.

ஒளியச்சு
செம்பாறை

அச்சிட்டோர்
நவஜோதி அச்சகம்
சென்னை-600 002

படைப்புகள்,சந்தா
மற்றும் தொடர்புகளுக்கு
எம்.ஜெ.நாயகம்
நிர்வாகி
57/1,திருக்கழுகுன்றம் ரோடு,
வல்லம் அஞ்சல்,
செங்கல்பட்டு-603 002.

# களம் காணும் நெஞ்சங்களே!

ஜோ கனஸ்பர்க் – தென்னாப்பிரிக்க நாட்டின் தங்க வயல். கனிவளம் நிறைந்த பகுதி. இப்பகுதியில்தான் சொவேட்டோ என்ற ஒரு பெரிய சேரி அமைந்துள்ளது. இங்கு வாழ்வோரின் உழைப்பும் கனிவளமும் இணைத்தே வெள்ளை இனத்தவரால் சுரண்டப்பட்டது தென்னாப்பிரிக் வரலாறு!

சொவேட்டோ இன்றும் கருப்பின மக்கள் வாழும் இடம். தென்னாப்பிரிக்க விடுதலைக்கான பல புரட்சிகளும் போராட்டங்களும் வெடித்த ஒரு முக்கிய பகுதி. 1976 ஆம் ஆண்டு ஜூன் 16 ம் நாள் இங்கு நடந்த போராட்டத்தில் வெள்ளை ராணுவத்தால் பல கருப்பின சிறுவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்களில் மிகக் குறைந்த 13 வயதுடைய சிறுவன் ஹெக்டர் பீட்டர்சன் சுட்டுக்கொல்லப்பட்ட இடத்தையும் விதத்தையும் அங்கிருந்த கருப்பின தோழர்கள் கூறியபோது இதயம் கனத்தது.

அப்பகுதியில் உள்ள ரெஜினா முண்டி என்ற ஆலயம் விடுதலைக்கான பயிற்சி கூடமாகக் கருப்பின மக்களால் மாற்றப்பட்டது. வெள்ளை ராணுவம் அவ்வாலயத்தில் நுழைந்து கருப்பின தோழர்களைச் சுட்ட தடயங்களைப் பார்க்கும்போது இனவெறியின் கொடூரத்தை உணர்ந்தேன். இவ்வாறு பல நிகழ்ச்சிகளால் தென்னாப்பிரிக்க கருப்பின மக்கள் தங்கள் விடுதலைக்குக் கொடுத்த விலையைக் கணிக்க முடிந்தது.

கருப்பின மக்களுக்கென்று தனி வாழுமிடம், வழிபடும் இடம், தனிக் கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், தனிக் கடைகள், குறிப்பிட்ட வேலைகள் என்று ஒதுக்கி இவைகளைச் சட்டமாக்கி இனஒதுக்கல் ஆட்சியை தென்னாப்பிரிக்காவில் நடத்தி வந்தது வெள்ளையர் அரசு. கருப்பின தோழர்களைக் கருப்பு நிறத்தவர் என்ற ஒரே காரணத்தால் ஒதுக்கினர்! இத்தகைய வேறுபாடுகளை நேரில் பார்த்தபோதும் கேட்டபோதும் நம்நாட்டு தீண்டாமை அனுபவம் உயிரூட்டம் பெற்றது. தலித் மக்களின் தீண்டாமைக் கொடுமைகளை இவ்வுலகில் வேறொரு பகுதி மக்கள் புரிந்துக்கொள்ள முடியும் என்றால் அவர்கள் தென்னாப்பிரிக்க கருப்பினத்தவராகத்தான் இருக்க முடியும் என்றுணர்ந்தேன்.

இத்தகைய, தென்னாப்பிரிக்க மண்ணில்தான் டர்பன் நகரில் ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 8 தேதி வரை ஐ.நா. சபையின் "இனவெறி எதிர்ப்பு உலக மாநாடு" நடைபெற்றது பொருத்தமானதாகவும், வரலாற்று சிறப்புமிக்கதாகவும், உலக கவனத்தை ஈர்த்ததாகவும் அமைந்தது! இம்மாநாட்டையொட்டி இதே கருத்தை மையப்படுத்தி இளைஞர்கள் உலக மாநாடும், மக்கள் அமைப்புகளின் NGO மாநாடும் நடைபெற்றன.

இளைஞர்கள் மாநாட்டில் சுமார் 300 பேரும், மக்கள் அமைப்புகளின் மாநாட்டில் ஏறக்குயை 7000 பேரும் கலந்துக்கொண்டனர். ஐ. நா. சபையின் மாநாட்டின் 163 நாடுகளிலிருந்து 2300 அரசுப் பிரதிநிதிகளும் மக்கள் அமைப்புகள் சார்பாக 4000 பிரதிநிதிகளும் தகவல் தொடர்பு துறைகளிலிருந்த சுமார் 1100 பேரும் கலந்துக்கொண்டனர். இம்மாநாட்டின் தலைவராக தென்னாப்பிரிக்க வெளியுறவு அமைச்சர் மாண்புமிகு என்.டி சுமா அவர்களும் பொதுச்செயலராக ஐ.நா. மனித உரிமை ஆணையர் மாண்புமிகு மேரி ராபின்சன் அவர்களும் செயல்பட்டனர். இவர்களில் மாண்புமிகு என்.டி. சுமா அவர்கள் கருப்பின சகோதரி என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டிலிருந்து கருப்பினத்தோழர்களும் மாண்பிழந்த மக்களும் அதிகம் எதிர்பார்த்தனர். தென்னாப்பிரிக்க அதிபர் தபு.எம்பெக்கி தனது தொடக்க உரையில் குறிப்பிட்டது போல 'உலகில் அநேக மக்கள் வெள்ளையர்களாக இல்லாத காரணத்தினாலேயே மாண்பிழந்து அவமானப்பட்டு துன்பத்துக்குள்ளாகியுள்ளனர். இத்துன்பங்களையெல்லாம் விரட்டியடிக்க இம்மாநாடு உதவும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது'. உலகில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளுக்கு சாதியமும் ஒரு காரணம் என்று மக்கள் அமைப்பு மாநாட்டில் இவர் கோடிட்டு காட்டினார்.

இனவெறி, இனப்பாகுபாட்டால் கருப்பினத்தோழர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கும், துன்பங்களுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக நிலவியதால் இம்மாநாடு வரலாற்றுத் தன்மையுடையதாகவும், பரப்பரப்பாகவும் பேசப்பட்டது. 'கடந்த காலங்களில் கருப்பின மக்களுக்கு இழைக்கப்பட்ட இனவெறி கொடுமைகளுக்கு மன்னிப்பு கோருவதும், நஷ்டஈடு கோருவதும் எங்களைப் பொருத்த மட்டில் முக்கியமானது. இது வெறும் பொருளாதார எதிர்பார்ப்பு அல்ல மாறாக மனித மாண்பை கோருவது' என்று இம்மாநாட்டின் தலைவர் என்.டி.சுமா சுட்டிக்காட்டியது குறிப்பிடத் தக்கது.

'சர்வதேச மனித உரிமைகள் சாசனம் முதல் பிரிவில் குறிப்பிட்டுள்ள சமத்துவம் உண்மையல்ல; அன்றாட வாழ்வில் இலட்சக்கணக்கானோர் சமத்துவமின்மையால், ஏற்றத்தாழ்வுகளால் துன்புறுகின்றனர். இது வரலாற்றுத் தவறுகளைச் சரி செய்யும் நேரம், இவ்வாய்ப்பை அதற்கு பயன்படுத்துவோம். இப்பூகோளத்தில்



படிப்பகம்

www.padippakam.com



மேரி ராபின்சன்
ஐ. நா. மனித உரிமை
ஆணையர்

# வரலாற்றுத் தவறுகளைச் சரிசெய்வோம்!

வாழும் நாம் ஒருவருக்கொருவர் வேதனை கொடுத்திருக்கின்றோம். அவ்வேதனைகளைப் பற்றி பேசும் உரையாடலின் தொடக்கமாக இம்மாநாடு அமையட்டும் என்றெல்லாம் இம்மாநாட்டு செயலர் மேரி ராபின்சன் கோடிட்டுக் காட்டியது அவரது மனித நேயத்தையும், வாழ்வின் யதார்த்தத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது.

இம்மாநாட்டின் முடிவில் "அடிமைத்தனம், அடிமைகள் விற்பது இன ஒதுக்கல், காலனி ஆதிக்கம், இனப்படுகொலை ஆகியவை மனித குலத்தில் இலட்சக்கணக்கான ஆண்களுக்கும், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பெரும் துன்பங்களையும், அவலநிலையையும் விளைவித்திருக்கின்றன" என்று ஐக்கிய நாடுகள் ஒப்புக்கொண்டு அதற்காக வருத்தத்தையும் தெரிவித்திருக்கிறது. இப்பிரகடனம் வளரும் நாடுகளில் புதிய வளர்ச்சி திட்டங்களுக்கு உதவியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது ஒரு வரலாற்று நிகழ்ச்சி! என்.டி. சுமா குறிப்பிட்டுள்ளதுபோல் இம்மாநாடு இனவெறிக்கெதிரான போராட்டத்திற்குப் புதிய பாதை அமைத்துள்ளது!

கருப்பினத் தோழர்களின் பிரச்சனை தவிர, பாலஸ்த்தீன மக்களின் பிரச்சனை, தலித் / சாதிப்பிரச்சனை, பழங்குடி மக்களின் பிரச்சனை என பல்வேறு பிரச்சனைகள் அரங்குகளில் விவாதிக்கப்பட்டன. அறிக்கைகள், செயல்திட்டங்கள் என பல விதங்களில் அமர்வுகள் நடத்தியது ஐ.நா. சபை அமைப்பு.

இங்குச் சாதிப்பிரச்சனையைத் தொட்டால் இந்தியாவைப் பொருத்த மட்டிலும் இம்மாநாடு முக்கியமானதாகும். சாதிப் பிரச்சனையை இம்மாநாட்டில் விவாதிக்கக் கூடாது என்பதில் இந்திய அரசு தொடக்கத்திலிருந்தே உறுதியாக இருந்தது. அதற்காகத் திட்டங்கள் தீட்டியும் செயல்பட்டது.

இந்தியாவில் இருந்து சென்ற மக்கள் அமைப்புகளைச்சார்ந்த தோழர்களும் அங்கு வந்திருந்த அயல்நாடுகளில் வாழும் தலித்துக்கள் சிலரும் ஒருங்கிணைந்து சாதிப் பிரச்சனையை ஐ. நா அரங்கில் விவாதிக்க வேண்டும் என்று திட்டமிட்டு செயல்பட்டது பாராட்டத்தக்கது. மக்கள் அமைப்பு மாநாட்டு இறுதியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சாதிப் பிரச்சனை இடம்பெற்றிருப்பது வெற்றியின் அறிகுறியாகும். இதைத் தொடர்ந்து ஐ. நா. வில் சாதிப் பிரச்சனையை விவாதிக்கக்கோரி அரங்கிற்கு அருகில் தலித் தோழர்கள் ஆர்ப்பாட்டங்களும், பட்டினிப்போராட்டங்களும் நடத்தியது உலகோர் கவனத்தை ஈர்த்தது என்றால் மிகையாகாது!

உலக தொடர்பு சாதனங்கள் இப்பிரச்சனை மீது கவனத்தை செலுத்த ஆரம்பித்தன. தலித் மக்களின் இசைக் கருவியான பறைக் கொண்டு அங்கு முழக்கமிட்டது தலித் கோரிக்கைகளுக்கு வலு சேர்த்தது. ஐ. நா. அரங்கில் சாதிப் பிரச்சனை பேசியாகவேண்டும். அது இம்மாநாட்டிற்கு பொருத்தமான விவாத பொருள் என்று ஒருங்கிணைந்து இறுதிவரை கோரிக்கை விடுத்தனர் மக்கள் அமைப்பு தோழர்கள்.

ஐ.நா. அரங்கில் இந்திய வெளியுறவு இணைஅமைச்சர் ஓமர் அப்துல்லா அரசு சார்பில் அறிக்கை தாக்கல் செய்யும்போது "இவ்வுலக மாநாட்டையொட்டி எழுந்த பிரச்சாரங்களில் சில நிகழ்ச்சிகளை வைத்து இந்தியாவில் நிலவும் சாதிய பாகுபாடுகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன" என்று குறிப்பிடுகையில் மாநாட்டு அரங்கில் பார்வையாளர்களிடமிருந்து எதிர்ப்பு ஒலி கிளம்பியது கவனிக்கத்தக்கது!

இந்திய தேசிய மனித உரிமை ஆணையத்தின் சார்பில் நீதியரசர் டாக்டர். கே. ராமசாமி ஐ.நா. வில் தாக்கல் செய்த அறிக்கையில் "உலகில் மற்ற பகுதிகளில் உள்ளது போல் இந்திய வரலாறும் சமூகமும் சமத்துவமின்மை– பாகுபாடுகள் என்ற வடுக்களை தாங்கியுள்ளன. தலித் மக்களும் பழங்குடி மக்களும் இந்தியாவில் வரலாற்று அநீதிகளுக்குப் பலியானவர்கள்" என்று வெளிப்படையாக கூறும்போது அரங்கில் பலத்த கரவொலியும் வரவேற்பும் இருந்தன.



படிப்பகம்

www.padippakam.com

இதே அரங்கில் 1946 ஆம் ஆண்டு ஐ. நா. அரங்கில் இனஒதுக்கலுக்கு எதிராக குரல் எழுப்பிய முதல் நாடு இந்தியா. சமத்துவம், நீதி, அமைதி, வளர்ச்சி என்று சொல்லக்கூடிய மனித நேயக்கொள்கைகளுக்கு எதிரானவை இனவெறியும், இனப்பாகுபாடும் என்று இந்தியா எப்பொழுதுமே கருதி வருகின்றது. இத்தகைய இனவெறி, இனப்பாகுபாடுகள் சர்வதேச மனித உரிமை சாசனத்திற்கு எதிரானவை என்று முழங்கியது முரணாக ஒலித்தது.

இம்மாநாட்டில் செயல்திட்ட சாசனத்தில் இடம்பெற்ற 73 வது பிரிவு "வேலை மற்றும் வம்சாவழி அடிப்படையில் எழும் பாகுபாடுகளைக் களைய அரசுகள் தேவையான சட்ட மற்றும் நிர்வாக மாற்றங்களை கொண்டுவர வேண்டும். இவைகள் முழுமையாக மதிக்கப்பட்டு எல்லா நிலைகளிலும் செயல்படுத்தப்பட வேண்டும்" என்று கூறுகிறது.

இப்பிரிவு தலித் விடுதலையைக் கூர்மைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லும் என்று கருதப்பட்டது. இந்தியாவைப் பொருத்த மட்டில் வேலை மற்றும் வம்சாவழியில் வரும் பாகுபாடுகளுக்கு உட்பட்டு பலியாவது தலித் மக்களே! ஆனால் இப்பிரிவு விவாதத்திற்கு வராமல் பார்த்துக்கொண்டது இந்திய அரசு. ஐ.நா.வை பொருத்த மட்டில் நேரமின்மையால் விவாதம் கைவிடப்பட்டதே யொழிய தள்ளப்படவில்லை. ஒரு விதத்தில் இந்திய அரசு இதை வெற்றியாகக் கருதலாம்!

அடித்தட்டு தலித் மக்களைப் பொருத்த மட்டில் இம்மாநாட்டை வெற்றியாகக் கருத வேண்டும். வரலாற்று ரீதியாக வாய்ப்பும் கல்வியும் மறுக்கப்பட்ட நம்மால் கூட உலக அரங்கில் நமது பிரச்சனைகளை எழுப்ப முடியும் என்று நிரூபித்துள்ளோம். இன்று சுமார் 300 மில்லியன் தலித் மக்களின் பிரச்சனை உலகப்பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.


ஐ.நா வைப் பொருத்தமட்டில் அது மூன்றுவித பிரச்சனைகளைச் சந்திக்கின்றது. பழையப் பிரச்சனைகளுக்கு முதலிடமும், தற்பொழுது நடைமுறையில் உள்ள பிரச்சனைகளுக்கு இரண்டாவது இடமும் உலக அரங்கில் நுழையும் புதியபிரச்சனைகளுக்கு மூன்றாவது இடமும் அளிக்கப்படுகிறது. தலித் பிரச்சனை 3000 ஆண்டுகாலப் பிரச்சனை என்றாலும் நமக்கு வாய்ப்புகள் இல்லாததால் கடந்த சில ஆண்டுகளாகவே நமது பிரச்சனையை உலக அரங்கிற்கு எடுத்துச் செல்லுகிறோம். எனவே நமது பிரச்சனை மூன்றாவது இடத்தில் உள்ளது. நடக்க வேண்டிய தூரம் வெகுவாக உள்ளது என்று மலைப்பது இயக்கத் தன்மையல்ல!

ஐ.நா. பொதுச்செயலர் கோபி அன்னன் தலித் பிரச்சனைகள் பற்றி "உங்கள் கோபமும் விரக்தியும் தன்னிலேயே மதிப்புள்ளவை" என்று குறிப்பிட்டார். "தலித் மக்கள் தங்களுடைய குறிக்கோளை அடைய இம்மாநாடு அடித்தளமிட்டுள்ளது" என்று மேரி ராபின்சன் சுட்டிக்காட்டியது தலித் போராட்டத்திற்கு வலு சேர்த்துள்ளது.

எனவே களத்தில் உள்ளவர்கள் ஊக்கம் பெற வேண்டும். உலகளாவிய ஆதரவு நமக்கு உருவாகி வருகின்றது. அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் சார்பிலும் கலந்துக் கொண்டதால் இயக்கத்திற்கு வேகம் அதிகரித்துள்ளது.

தென்னாப்பிரிக்க தந்தை நெல்சன் மண்டேலா இம்மாநாட்டில் ஆற்றிய வீடியோ உரையில் "இனவெறி ஒரு நோய்" என்றார். நம்மைப் பொருத்த மட்டில் சாதியம் ஒரு புற்று நோய். உடலிலேயே வைத்து மருத்துவம் பார்க்க வேண்டிய நோயல்ல புற்றுநோய்! இது வெட்டியெறிய வேண்டிய ஒன்று. சாதிய புற்று நோயை வெட்டி யெறிவோம்: இதைச் செய்வோரை தட்டிக் கொடுப்போம்.

*என்றும் களம் நிற்கும்!*





கோபி அன்னன்
ஐநா. பொதுச்செயலர்



என்.டி. சுமா
தென்னாப்பிரிக்க
வெளியுறவுத்துறை
அமைச்சா,
மாநாட்டு தலைவர்



படிப்பகம்

www.padippakam.com

# சாதனை படைக்கும் பஞ்சாயத்து தலைவர்



அசோகன்

தமிழகத்தில் பெரிய பஞ்சாயத்துகளில் ஒன்று முட்டுக்காடு பஞ்சாயத்து. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிழக்கு கடற்கரை ஒட்டியுள்ள பஞ்சாயத்து. கரிக்காட்டுக்குப்பம், முட்டுக்காடு, ஏகாட்டூர், கழிப்பட்டூர் ஆகிய கிராமங்கள் உள்ளடங்கியது இந்த பஞ்சாயத்து. இந்த பஞ்சாயத்தில் கிராமங்களே அதிகம் நீண்ட நாட்களுக்குப் பிறகு 1996 -ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலில் அமோகமாக வெற்றிபெற்று பஞ்சாயத்து தலைவரானார் ப.அசோகன்.

கடந்த 5 ஆண்டுகள் தலைவராக பதவி வகித்து தலைவர் அசோகன் சாதித்த சாதனைகள் ஏராளம். இவர் தலைவரானபோது புறம் பேசியவர்களும், எதிராக செயல்பட்டவர்களும் மூக்கின் மேல் விரல் வைத்து ஆச்சரியப்படும் அளவிற்கு இன்று பலமாக முனனேறியுள்ளது முட்டுக்காடு பஞ்சாயத்து.

பல கோடி ரூபாய்களைக் கொண்டு முதலீடு செய்து தொழில் நடத்திக்கொண்டிருக்கும் தனியார் நிறுவனங்கள் அதிகமாக உள்ள இந்த பஞ்சாயத்தில் அசோகன் தலைவராவதற்கு முன்புவரை இந்த தொழில் நிறுவனங்கள் எல்லாம் பஞ்சாயத்திற்கு உரிய வரியை சரிவர செலுத்தாமல் பல லட்ச ரூபாய்களை வரி ஏய்ப்பு செய்து வந்திருக்கின்றன. இதனை அறிந்த தலைவர் அசோகன் சட்டப்படி தனியார் நிறுவனங்கள் பஞ்சாயத்திற்கு கட்ட வேண்டிய வரியைக் கட்டச் சொல்லி அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பினார்.

ஒருசில நிறுவனங்கள் தங்களுக்குள்ள அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி இவரை மிரட்டின. குறிப்பாக தி.மு.க ஆட்சியில் அப்போதைய ஆளுங்கட்சி பெரும்புள்ளிகள் தங்களுடைய செல்வாக்கை பயன்படுத்தி பணிய வைக்க முயற்சி செய்தனர். எதற்கும் பலனில்லாமல் போனது.

இவருடைய அதிரடித்திட்டத்தினால் பஞ்சாயத்தின் வருமானம் அதிகரிக்க ஆரம்பித்தது. பல ஆண்டுகளாக வருமானமே பெற்றுதந்திராத முட்டுக்காடு படகு குழாம் ஏலம் விடப்பட்டு அதன்மூலம் பஞ்சாயத்திற்காக வருமானம் திரட்டப்பட்டது. ஏறக்குறைய ரூபாய் 95 லட்சத்தை முட்டுக்காடு பஞ்சாயத்திற்காக செலவு செய்யப்பட்டுள்ளது. திரட்டப்பட்ட அனைத்து நிதியும் பஞ்சாயத்தில் அடிப்படை வசதிகளுக்காகவும், பல்வேறு திட்டப்பணிகளுக்காகவும் செலவழிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமத்திற்கும் 10 முதல் 15 கழிப்பறைகள் வரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்திலுள்ள ஒவ்வொரு தெருவிற்கும் குடிநீர் வசதி முழுமையாக செய்துமுடிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாகத் தூர்வாரப்படாத குளங்கள், ஏரிகள், தூர்வாரப்பட்டு கோடைக்காலங்களிலும் தண்ணீர் தேங்கி இருப்பதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் செய்யப்பட்டுள்ளதுபோல ஒவ்வொரு தெருவிற்கும் சுடுகாட்டுப் பாதைக்கும்கூட சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது. பஞ்சாயத்து முழுவதும் நகர்ப்புறங்களைப்போல சோடியம் விளக்குகள் போடப்பட்டு இரவை பகலாக்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும் ரேஷன் கடைகள், தொலைக்காட்சி அறை போன்றவை கட்டப்பட்டுள்ளது. பஞ்சாயத்து தலைவரின் சில துணிச்சலான நடவடிக்கைகளினால் பல திட்டங்கள்








படிப்பகம்





பட்டுள்ளன. கொஞ்சம் மழைபெய்தாலும் எங்க ஊரே தண்ணியில மிதக்குங்க திடீரென்று கடல் தண்ணீரும் எங்க கிராமத்தில புகுந்திடும், அதோடு எங்க கிராமத்தை விட்டு வெளியே வரவேமுடியாது. இந்த நிலைமை அசோகன் தலைவரா ஆவதற்கு முன்னாடி இருந்திச்சிங்க அவரு தலைவரா வந்த பிறகு தண்ணீரும் கழிவு நீரும் வெளியேறுவதற்கு சிமெண்ட் போட்ட கால்வாய் கட்டி கொடுத்திருக்காருங்க அதோட எங்க ஊருக்கு மட்டும் 12 கழிப்பறைகள் கட்டிகொடுத்திருக்காரு. சின்ன சின்ன தெருவுக்குக் கூட சிமெண்ட் ரோடு போட்டிருக்காரு, தண்ணீர் டேங்க் மற்றும் மழைக்காலங்களில் தண்ணீர் கடலுக்குள் செல்வதற்கும் அங்கேயுள்ள சாமியை கும்பிடுவதற்கும் வசதியாக சின்ன பாலம் ஒன்று கட்டிக்கொடுத்திருக்காரு, தெருவிளக்குகளுக்கு பஞ்சமில்லை. எங்களுடைய பிள்ளைகளும் படிப்பதற்கு நல்ல பல வசதிகளை செய்திருக்காரு. எங்க வீடுகளில் எந்த நல்லது,கெட்டது நடந்தாலும் ஊருக்கு முன்னாடி வந்து நிற்பாருங்க. நாங்களும் எந்நேரமானாலும் நடுராத்திரி நேரத்திலும அவரிடம் உதவி தேடியோ அல்லது கிராமத்திற்காக உதவி கேட்டோ போனால் உடனே அதற்குண்டான வழிவகைகளை செஞ்சிக்கொடுப்பார். இவர் எங்க பஞ்சாயத்து தலைவராக வந்தது ரொம்ப நல்லதா போச்சுங்க என்ன உதவி கேட்டாலும் முகம் சுளிக்காமல் செய்வாரு. இவர் வந்த பிறகுதான் எங்க கிராமம் முன்னேற்றத்திற்கு வந்திருக்கு என்று கூறுகிறார்கள் கரிக்காட்டு குப்பத்தை சார்ந்த கிராம மக்கள்.

எங்களுடைய குறை என்று பார்தோம்னா நாங்க பஞ்சாயத்து தலைவரை பார்க்க வேண்டுமென்றால் 15 கி.மீ சுற்றிக் கொண்டுதான் போகவேண்டும். ஏனென்றால் நாங்க இருப்பதுதோ கடற்கரை ஓரம் ஆனால் தலைவர் இருக்கும் ஏகாட்டூருக்கும் எங்களுக்கும் இடையில் பக்கிங்காம் கால்வாய் இருப்பதால் இதில் எல்லா காலங்களிலும் தண்ணீர் இருப்பதால் 15 கி.மீ சுற்றிக்கொண்டுதான் போகவேண்டும். இதற்கு ஏதாவது பாலம் அமைச்சிருந்தால் நாங்க ஒரு கிலோமீட்டர் தூரத்தில் தலைவரை பார்த்துவிடுவோம் என்பதுதான் எங்களுக்கு இருக்கும் ஒரே குறை. ஆனால் சும்மா சொல்லக்கூடாது ஏகாட்டூருக்கும் , முட்டுக்காட்டுக்கும் பாலம் அமைக்க தலைவர் ரொம்பவும் கஷ்டப்பட்டாரு, பெரிய இடத்திற்கெல்லாம் இந்த பிரச்சனையை எடுத்துக்கிட்டு போனாரு அதற்காக மற்ற பஞ்சாயத்து வேலைகளையும் நிறுத்திவிடவில்லை. எங்களுக்கு தெரிஞ்சி மீண்டும் இவரே பஞ்சாயத்து தலைவரா வந்தால் பாலம் கட்டிக்கொடுப்பது மற்றும் விடுபட்ட வேலைகளைக் கண்டிப்பாக செய்து முடிப்பாரு என முட்டுக்காடு மற்றும் கரிக்காட்டுக் குப்பத்தைச் சார்ந்த மக்கள் நம்மிடம் கூறினார்கள்.

அதோடு இவருடைய கட்டுப்பாட்டிற்கு கீழ் வராத மற்ற பல திட்டங்களுக்காகவும் குறிப்பாக தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கும் அரசாங்கத்திடமும் அதிகாரிகளிடமும் சட்ட மன்ற உறுப்பினர்களிடத்திலும் பல முறை கோரிக்கைகள் வைத்து அதைப்பெறுவதற்கு ரொம்பவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார். எங்க புள்ளைங்க படிக்கிறதுக்காக இரவுப்பள்ளியை ஆசிரியர்கள் வைத்து நடத்தி அவர்களுக்கு இவரே ஊதியமும் கொடுத்து வருகிறார். என சான்றிதழ் கொடுக்கின்றனர் ஏகாட்டூர், கழிப்பட்டூர் கிராம மக்கள். லட்சக்கணக்கில் வருமானம் வந்து, பணப் புழக்கம் இந்த பஞ்சாயத்தில் அதிகமாக இருந்தாலும் கறைபடியாத கைகளுக்கு சொந்தக்காரர் என பெயரெடுத்தவர் இவர். பொதுமக்களிடமும், அதிகாரிகளிடமும் சிறந்த மனிதர், சிறந்த தலைவரென பெயரெடுத்துக்கொண்டிருக்கின்ற தலைவர் அசோகன் தன்னுடைய பஞ்சாயத்து பணியை ஒரு சமூக சேவையாகவே செய்து கொண்டிருக்கின்றார். ஒடுக்கப்பட்ட,ஏழை, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் பல போராட்டங்களை சந்தித்து சிறை சென்றுள்ளார். இவருடைய பஞ்சாயத்தில் உள்ள எம்.ஜி.எம் என்ற தனியார் சுற்றுலா நிறுவனத்தில் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பிரச்சனையில் தொழிலாளர்களுக் காகப் போராடி சிறை சென்றது இவருடைய தியாக வரலாறு.

தொடர்ச்சி26 ம் பக்கம்...







www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# நதிகளின் இணைப்பே தேசிய ஒருங்கிணைப்பு!

மோ. ஜேம்ஸ்

இன்று ஒரு லிட்டர் பால்விலை பத்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. குடிநீரின் விலையோ லிட்டர் 12 ரூபாய் முதல் 16 ரூபாய் வரை மினரல் வாட்டர் என விற்பனை சரக்காகி உள்ளது.

சென்னை போன்ற மிகப் பெரிய நகரங்களில் ஒரு மத்திய தர வர்க்க குடும்பத்தினர் நாளொன்றுக்கு இரண்டு 12 லிட்டர் தண்ணீர் கேனுக்கு 40 ரூபாய் செலவு செய்கின்றனர்.

மாதத்திற்கு ரூ. 1200 வீதம் வருடத்திற்கு குடிநீருக்காக மட்டும 16 ஆயிரம் ஒரு குடும்பத்தினர் விரையம் செய்ய வேண்டிருக்கிறது. அதாவது குடிநீருக்காக செலவு செய்யும் பணத்தில் நாலரை சவரன் தங்கநகையை வாங்க முடியும். கொஞ்சம் வசதி படைத்த குடும்பம் ஒன்று லாரி தண்ணீருக்கு என்று வருடத்திற்கு 2 லட்சம் ரூபாய் வரை தங்களது பட்ஜெட்டில் ஒதுக்குகின்றனர்.



தென்னக நதிகளை இணைக்கக்கோரி தமிழ்நாடு விவசாய சங்கத்தினரின் பிரச்சார பயணம்

இன்று குடிநீர் முற்றிலும் பண்ட பொருளாக மாறிவிட்டது. ஏரி, குளம், கால்வாய்கள் கரையை பலப்படுத்துவது ஆழப்படுத்துவது என்பது முற்றிலுமாக காண்டிராக்டர்கள் அரசு அதிகாரிகளின் ஊழல் பணம் சுரண்டும் தளங்களாக மாறிவிட்டது. நீர்நிலைகள் வற்றிப் போக காரணமாக உள்ளது.

காவிரி, வைகை, பாலாறு போன்ற தமிழகத்தில் பாயும் நதிகள் இன்று நீர் புரண்டு ஓடும் ஆறுகளாக இல்லாமல் புதர்கள் மண்டி மண்மேடுகளாகி சாக்கடை நீரை சுமந்து செல்கின்றன.

வறட்சிக்குப் பின்னால் வெள்ளமும், வெள்ளத்துக்குப் பின்னால் வறட்சியும் மாறி, மாறி தமிழ்நாட்டை தாக்கி வருகின்றது. ஆண்டுதோறும் ரூ. 2000 கோடி முதல் 5000 கோடி வரை தமிழ்நாட்டிற்கு இழப்பு ஏற்படுகின்றது. மழைக்காலத்தில் நீரை சேமித்து வறட்சி காலத்தில் பயன்படுத்தக்கூடிய வகையில் வறட்சி, வெள்ளத்தடுப்பு, மழைநீர் சேமிப்பு ஆகிய ஒருங்கிணைந்த திட்டத்தை அமலப்படுத்த வேண்டும்.

தமிழ்நாட்டில் சுமார் 7 லட்சத்து 15 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் 39 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏரிகள் அமைந்துள்ளன. அவைகள் தமிழகத்தின் பாசன பரப்பில் 36 சதவீதத்தைப் பூர்த்தி செய்கின்றன. அத்தகைய வாய்ப்புள்ள ஏரிகளின் அழிவைத் தடுக்க வேண்டும். நபார்டு, உலகவங்கி, சர்வதேச நிதியகம், ஐரோப்பிய பொருளாதார குழு உட்பட பல அமைப்புகள் ஏரிகள் சீரமைப்பிற்காக தமிழ்நாடு அரசுக்கு உதவியளிக்கின்றன. பெரும் பகுதி ஏரிகளை பொதுப்பணித்துறை நிர்வகிக்கின்றது. வருகின்ற நிதிகள் முறையாக செலவழிக்கப்படுவதில்லை என பல விபரங்கள் தெரிவிக்கின்றன.

தூர்வாருதல், மராமத்து பணிகளில் விவசாயிகளை ஈடுபடுத்தவேண்டும். விவசாயிகள் ஈடுபாட்டுடன் நடைபெற்ற தூர்வாரும் பணிகள் சிறப்பாக நடந்துள்ளன என்று நபார்டும், புது டெல்லியில் உள்ள போர்டு பவுண்டேஷனும், அண்ணா பல்கலை கழகமும் இணைந்து நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளதாக அறிவித்துள்ளன. நீர்வள பாதுகாப்பு, சிக்கன பயன்பாடு போன்றவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்திட நீர்வளத்துறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

விரிந்து பரந்துள்ள நமது நாட்டின் நீர்வளத்தை நாட்டின் எல்லாப்பகுதி மக்களுக்கும் பயன்படச் செய்வது ஆட்சியில் இருப்பவர்களின் கடமையாகும். அத்தகைய கடமையை வலியுறுத்தி கங்கை, யமுனை, மகாநதி, கோதாவரி போன்ற ஜீவநதிகளின் உபரி நீரைத் தமிழ்நாடு போன்ற வறண்ட பகுதிகளுக்கு பயன்படுத்த முடியும், பயன்படுத்த வேண்டும்.

இந்தியநாடு 500 மில்லியன் ஹெக்டேர் மீட்டர் மழை வளத்தையும், பல வள நதிகளையும் கொண்டுள்ளது. இந்த மழைநீர் அனைத்தையும் அணைகள், ஏரிகள் போன்ற நீர்த்தேக்கங்கள் மூலம் சேமித்து வைத்து வேளாண்மைக்குப் பயன்படுத்தினால் நமது நாட்டில் விவசாயத்திற்கு ஏற்ற 185 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பிற்கும் ஆண்டு முழுமைக்கும் நிலையான பாசனவசதி ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

ஒவ்வொரு ஹெக்டேர் விவசாய நிலமும் சராசரியாக 2.7 ஹெக்டேர் மீட்டர் நீர்வளம் கிடைக்கப்பெறும். ஆனால் நமது சாகுபடி பரப்பில் 50 சதவிதப் பரப்பு பாசன வசதியின்றி வானம் பார்த்த பூமி யாகவே இருந்து வருகிறது. இதன் காரணமாக வேளாண்மையையே நம்பியுள்ள சிறு விசாயிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாடுகின்றனர்.

மத்திய பிரதேசத்தில் தோன்றி ஒரிசா வழியாகப்பாயும் மகாநதி தன்னுடைய பெயருக்கு ஏற்றவாறு மிகப்பெரிய நதியாகும். இதன் தண்ணீர் 80 சதவீதத்திற்குமேல் பயன்படாமல் கடலில் கலக்கிறது. இதுபோலவே கோதாவரி, கிருஷ்ணா, ஆகிய நதிகளின் பெரும்பகுதி நீர் மழைக்காலத்தில் பயன்படுத்தப்படாமல் கடலில் கலக்கிறது. கடலில் கலப்பதைத் தவிர்த்து மகாநதி — கோதாவரி — கிருஷ்ணா — பெண்ணைஆறு — பாலாறு — காவிரி — வைகை ஆகிய நதிகளை இணைத்தால் 132 லட்சம் ஹெக்டேர் புன்செய் நிலத்திற்கு பாசன வசதி ஏற்படுத்திக்கொடுக்க முடியும் என நீர்பாசன வல்லுனர்கள் குழு கண்டறிந்து



படிப்பகம்

www.padippakam.com

இத்திட்டத்திற்கு ரூ. 50,000 கோடி செலவாகும் என தெரிவித்துள்ளனர்.

கிண்டி பொறியியல் கல்லூரியின் ( அண்ணா பல்கலைக்கழகம் ) முன்னாள் மாணவர்கள் – இன்றைய வல்லுனர்கள்குழு. மேற்கூறிய தென்னிந்திய நதிகள் இணைப்புத் திட்டத்தை ஆராய்ந்து சாத்தியக் கூறுகளைச் சுட்டிக்காட்டி இத்திட்டத்தை நிறைவேற்ற அரசுக்குப் பரிந்துரைத்துள்ளனர்.

1. பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் இந்திய அரசு முனைப்புடன் செயல்படுவதை அறிவோம். அண்மையில் நாட்டிலுள்ள நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்ய ரூ. 42,000 கோடி நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. இதுபோலவே 132 லட்சம் ஹெக்டேர் புன்செய் நிலங்களுக்கு ரூ. 50,000 கோடி செலவில் பாசன வசதி ஏற்படுத்தி சுமார் 650 இலட்சம் மக்களுக்கு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை உறுதி செய்யவும் ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கு குடிநீர்த்தேவையைப் பூர்த்தி செய்யவும், பல்லாயிரக்கணக்கான சிறுவிவசாயிகள், நிலமற்ற விவசாயத்தொழிலாளர்கள் ஆகியோரின் வாழ்வு மேம்படவும் தென்னிந்திய நதிகளான மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணைஆறு, பாலாறு, காவிரி, வைகை இணைப்புத்திட்டத்தை நிறைவேற்ற நல்வாய்ப்புகள் உள்ளன. இத்திட்டம் அமெரிக்க நாட்டிலுள்ள டென்னசி பள்ளத்தாக்கு திட்டத்தைப்போல இந்திய பொருளாதார வளர்ச்சிக்குச் சிறந்ததோர் அடித்தளமாக அமையும்.

2. இத்திட்டத்தின் மூலம் பாசன வசதி பெறும் ஒவ்வொரு ஹெக்டேரும் ரூ.25,000 என்ற அடிப்படையில் 132 லட்சம் ஹெக்டேருக்கு ரூ33,000 கோடியை நாட்டுடமை ஆக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து நீண்டகால கடனாகப் பெறலாம். மீதமுள்ள ரூ. 27,000 கோடியை மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநில அரசுகள் தங்கள் மாநிலத்தில் இத்திட்டத்தின் மூலம் பயன்படும் பரப்பளவுக்கு ஏற்ப பகிர்ந்து கொள்ளலாம்.

இந்தியாவில் ஏராளமான தண்ணீர் வசதியுள்ளது எவ்வளவு தேவையோ அதைவிட பத்து மடங்கு அதிக தண்ணீர் உள்ளது. என்று சர். ஆர்தர் காட்டன் எழுதியிருக்கிறார். கோதாவரி படுக்கையில் விளைந்த பருத்தியை உள்நாட்டில் சாலைப்போக்குவரத்து மூலம் கொண்டு செல்வதைவிட நீர் வழி போக்குவரத்தின் மூலம் குறைந்த செலவில் எடுத்துச் செல்ல முடியும் என எடுத்துக்காட்டினார்.

இதற்காக இந்தியா முழுவதும் உள்ள நதிகளை இணைத்து பெரும் கால்வாய்களை வெட்டினால் பாசன வசதிக்கு பயன்படுத்தலாம் நீர் வழிப்போக்குவரத்திற்கும் பயன் படும் என்று சொன்னார்.

பஞ்சாபில் பாயும் ஐந்து நதிகளையும் பிரம்மபுத்திராவுடன் இணைத்து நாக்பூர் சென்னை மேலும் தெற்கே இணைக்கக்கூடிய பத்தாயிரம் மைல் தூரம் கால்வாய்களை இணைக்க முடியும் என்று திட்டத்தைக் கொடுத்தார்.

160 லட்சம் பவுண்ட் செலவழித்து ரயில் பாதை போடுவதைவிட 300 லட்சம் பவுண்ட் செலவில் பத்தாயிரம் மைல் இணைப்புள்ள கால்வாய்களை வெட்டினால் நீர்பாசனத்துக்கும், சரக்கு போக்குவரத்துக்கான நீர்வழித் துறையாகவும் பயன்படும் என்று ஆங்கிலேய ஆட்சிக்கு இடித்துக் கூறினார்.

**1. வடமேற்கு கடற்கரை ஓரமாக பம்பாய் முதல் சிந்துநதிப் பள்ளத்தாக்கு இணைப்பு**

**2. தென்மேற்கு கடற்கரை ஓரமாக காலி நதியிலிருந்து கன்னியாகுமரி வரை.**

**3. கிழக்கு கடற்கரை ஓரமாக கால்வாய் – கன்னியாகுமரி முதல் கல்கத்தா வரை.**

**4. கல்கத்தா – ஹூக்ளி : கங்கா – கான்பூர்**

**5. சம்பல் வழியாக அலகாபாத் நர்மதா. வெயின் கங்கா – கோதாவரி.**

**6. பீமா –துங்கபத்ரா நதிகளின் வழியாக பெண்ணை ஆறு – கிழக்கு கடற்கரை கால்வாய் இணைப்பு.**

**7. சென்னை – கள்ளிக்கோட்டை**

**8. மகாநதி வழியாக வெயின் கங்கா – கட்டாக்.**

**9. வார்தா வழியாக தப்தியிலிருந்து கோதாவரி.**




**இதன் மூலம் இந்தியா முழுவதும் 10 ஆயிரம் மைல் நீளம் கால்வாய் அமைக்கலாம்.**

1971–72 ல் மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சராக இருந்த பொறியியல் மேதை டாக்டர் கே.எல். ராவ் வகுத்த நதிகள் இணைப்புத்திட்டம் கேப்டன் ஜே. தஸ்த்தூர் அளித்த திட்டம் ஆகியவற்றை ஆதாரமாக் கொண்டு மத்திய அரசின் தொழில் நுட்பக்குழு தேசிய நீர்வள மேம்பாட்டுத்திட்டம் என்று புதிய திட்டத்தை தயாரித்தது. அத்திட்டம் இமாலய நதிகளின் நீர்வள மேம்பாடு, தென்னிந்திய, தீபகற்ப நதிகளின் நீர்வள மேம்பாடு ஆகிய 2 அம்சங்களைக் கொண்டது. அதில் ஒரு அம்சப்படி மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணையாறு, காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகள் இணைப்பது ஒரு திட்டம். கேரளத்திலும், கர்நாடகத்திலும் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளின் உபரி நீரை மேற்கு தொடர்ச்சியை கடந்து கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளில் இணைப்பது மற்றொரு திட்டம். இந்த யோசனையை பல கோணங்களில் ஆய்வு செய்ய 1982 ல் அமைக்கப்பட்ட தேசிய நீர்வள மேப்பாட்டு நிறுவனம் தென்னிந்திய நதிகள் இணைப்பு பற்றி ஆய்வு செய்து இணைப்பு சாத்தியம் என்றும் இதனால் எந்த மாநிலத்திற்கும் பாதிப்பு வராது என்றும் அறிக்கை கொடுத்துள்ளது.

சமீபத்தில் ஓய்வு பெற்ற பொறியாளர்கள் பலர் இத்திட்டத்தை வலியுறுத்தியுள்ளனர். இத்திட்டத்தில் தமிழகம் உள்ளிட்ட சம்மந்தப்பட்ட மாநிலங்களில் 3 கோடி 74 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறும். வடக்கே வெள்ளம், தெற்கேவறட்சி என்ற நிலையை நிரந்தரமாகத் தடுத்திட நீர்பற்றாக்குறையை போக்கிட தென்னிந்திய நதிகள் இணைப்பை நிறைவேற்றிட மத்திய அரசு முன்வரவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com


காசிநாதன்

# போண்டியான ஆண்டிக்குழி தலித் மக்கள்

வி.பி.சிங் இந்தியப் பிரதமராக இருந்த நேரம்! 1990- ம் ஆண்டு இந்திய நாடு முழுவதும் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த நேரத்தில் தி.மு.க தலைமையிலான தமிழக அரசும் தன்பங்கிற்கு அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பித்துக்கொண்டிருந்தது. அதன் சாரமாக கிராமப்புறங்களில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா அரசால் வழங்கப்பட்டது.

அன்றைய தினம் பழைய தென்னாற்காடு மாவட்டமாக இருந்த இன்றைய விழுப்புரம் மாவட்டத்தில் திருநாவலூர் ஒன்றியத்திற்குட்பட்ட ஆண்டிக்குழி கிராம தலித் மக்கள் சுமார் 73 பேருக்கு பட்டா வழங்க தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்பட்டு பட்டாக்களும் வழங்கப்பட்டன.

ஆண்டிக்குழிக்கருகில் உள்ள சேந்தநாடு கிராமத்தைச் சார்ந்த சாதி இந்துவான வேலு படையாச்சியாருக்கு சொந்தமான சுமார் 3 ஏக்கர் நிலத்தை அரசே கையகப்படுத்தி தலா 3 சென்ட் வீதம் 73 தலித்துகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு பட்டா வழங்கப்பட்டது. இந்தபட்டா வழங்கும் நிகழ்ச்சி 14.09.90 ல் கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்ற கூடத்தில் மாவட்ட ஆட்சி தலைவர் தேவேந்திரநாத் சாராங்கி தலைமையிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை சிறப்பு ஆணையர் ஆர். ஏ. சீத்தாராம் தாஸ் முன்னிலையிலும் அப்போதைய ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் க. சுந்தரம் அவர்களால் பட்டா வழங்கப்பட்டது.

பட்டா வழக்கும் நிகழ்ச்சி மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது. பட்டா கொடுத்ததற்கான சான்றிதழ்களும் சம்பந்தப்பட்ட தலித் மக்களிடம் கொடுக்கப்பட்டது. கையகப்படுத்தப்பட்ட நிலமும் அளந்து விடப்பட்டு தலித் மக்களிடம் கொடுக்கப்பட்டது.

அரசு வழங்கிய இலவச வீட்டு மனையில் வீடுகட்டச் சென்ற தலித் மக்களுக்கு பெரிய ஷாக். அரசு அதிகாரிகளிடம் தன்னுடைய நிலத்தை கொடுத்த வேலு படையாச்சி தலித் மக்கள் வீடு கட்ட வந்தபோது தடுத்து நிறுத்தி விரட்டி அடித்தார் அரசு அதிகாரிகளால் அளக்கப்பட்டு நட்டு வைத்திருந்த காணிக்கற்களெல்லாம் பிடுங்கி எறியப்பட்டிருந்தன. சம்பந்தப்பட்ட நிலத்தை உழுது விவசாயம் செய்ய ஆரம்பித்துவிட்டார் வேலு படையாச்சி.

ஏமாந்துபோன தலித் மக்கள் பட்டா வழங்கிய அதிகாரிகளையும், மாவட்ட ஆட்சித்தலைவர்களையும் அணுகி முறையிட்டனர். அரசு அதிகாரிகளும் வேலு படையாச்சியாரிடம் பேச்சு வார்த்தை நடத்தியும், எச்சரித்தும் எதற்கும் அவர் அசைந்து கொடுப்பதாக தெரியவில்லை.



கடைசியில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வேலுபடையாச்சிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.11.12.97 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.. உடனடியாக சம்பந்த பட்ட நிலத்தை அரசு அறிவுறுத்தியபடி தலித் மக்களுக்கு ஒப்படைக்க வேண்டும் என்று உயர்நீதி மன்றம் கூறியது. ஆனால் இந்நாள் வரையிலும் வேலு படையாச்சி உயர் நீதி மன்ற ஆணையையோ அரசு ஆணையையோ மதிக்காமல் நிலத்தை தன் கைவசமே வைத்துக்கொண்டு உபயோகித்துக்கொண்டு வருகிறார்.

தி.மு.க பிரமுகரான வேலு படையாச்சி எந்த அரசு பதவியேற்றாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தன்னுடைய கையில் போட்டுக்கொண்டு அரசு ஆணை நீதிமன்ற அவமதிப்பையும் செய்து வருகின்றார். இவருடைய மகன்களில் செல்வராஜ் என்பவர் பி.ஜே.பி ஒன்றிய செயலாளராகவும் ராதாகிருஷ்ணன் என்ற மற்றொரு மகன் அ.தி.மு.க பிரமுகராகவும் இருப்பதால் சர்வகட்சிகளின் ஆதரவோடும் தன்னுடைய படைபலத்தாலும் தலித் மக்களை ஏமாற்றி மிரட்டி வருகின்றார்.

ஊராட்சி மன்றத்திற்கு தி.மு.க வைச் சேர்ந்த சிகாமணி என்பவர்தான் தலைவர்.

தொடர்ச்சி 26 ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# சாவுக்கே ஒரு சவால்!

பகத் சிங், ராஜகுரு, சுகதேவ் என்ற மூன்று லட்சிய வாதிகளின் தியாகங்களை இந்திய இளைஞர்கள் எப்போதும் மறந்துவிடமுடியாது.

இந்திய புரட்சியாளர்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கை முறைகளும் வித்தியாசமானவை. தியாகம், வீரச்செயல், தாய்மண்ணுக்காக உயிர் துறத்தல், ரத்தம் சிந்துதல், கொண்ட லட்சியத்திற்காக எதை வேண்டுமானாலும் செய்ய காத்திருத்தல் என்பதில் போட்டி போடுவதில் முதல் ஆளாக இருந்தவர் ராஜகுரு.

தனது அரசியல் போட்டியாளராக பகத் சிங்கையே கருதிய ராஜகுரு லாகூர் போலீஸ் தலைமையகம் எதிரில் சாண்டர்சின் தலையில் முதலில் சுட்டு மோட்டர் சைக்கிளுடன் எதிரியை கீழே வீழ்த்தியவர். இரண்டாவது குண்டு பகத் சிங் சுட்டது.

டெல்லி மத்திய பார்லிமெண்ட் கட்டிடத்தில் வெடிகுண்டு வீசுவதற்கு தன்னை கட்சி முடிவு செய்யவில்லை என்று கோபத்தின் விளிம்புக்கே சென்றார் ராஜகுரு.

சந்திரசேகர் ஆசாத் , பகத்சிங் போன்ற சக தோழர்களிடம் தன்னையும் பார்லிமெண்டில் குண்டுவீச அனுப்ப வேண்டும் என்று மல்லுக்கு நின்றார்.

வெடிகுண்டு வீச்சுக்கு பின்னர் புரட்சியாளர்கள் போலிசிடமிருந்து தப்ப முடியாது, கைது செய்து கோர்ட்டில் நிறுத்தப்படும்போது நீதிமன்றத்தில் தங்கள் வாதத்தை தெளிவாக ஆங்கிலத்தில் எடுத்துச் சொல்வதன் மூலம் இந்திய இளைஞர்களின் நெஞ்சத்தில் புரட்சி கனலை மூட்ட வேண்டும். அதனால் அதிகம் ஆங்கிலம் தெரியாத ராஜகுருவை கட்சி கமிட்டி இந்த செயலுக்கு அனுப்ப மறுத்தது.

இதன் காரணமாக கட்சியுடன் கருத்து வேறுபாடு கொண்டு பூனாவுக்கு சென்றுவிட்டார் ராஜகுரு. ராஜகுரு அப்படி ஒன்றும் வாட்டசாட்டமான நபர் அல்ல. கருத்த உடல், குழிவிழுந்த கண்கள், உடலில் விறகுகளாக துருத்திக்கொண்டிருக்கும் எலும்புகள் ஒல்லியான தேகம்.

ஆனால் ! கான்பூர் பள்ளி ஒன்றில் சிலம்பம் போன்ற இந்திய வீரக்கலைகளை கற்றுக்கொடுக்கும் உடற்பயிற்சி ஆசிரியர் வேலை அவருக்கு.

வறுமை, வாழ்வின் சோகம், விரக்தி, பாசத்தையே அறியாத மனசு அவரது முகத்தை கான்கிரிட்போல் இறுக்கி இருந்தது. நெஞ்சில் அடிபட்டு, நொந்து ஆறாத ரணங்களை ஏற்படுத்தி இருப்பதுபோல் தோற்றம். பந்தாவோ, படாடோபமோ இல்லை. லேசான புன்சிரிப்பு மட்டுமே உரித்தான அவரது பழைய வாழ்க்கை.

மகாராஷ்டிராவில் பூனா அருகில் உள்ள சாகன் கிராமம் ( தற்போது ராஜகுரு நகர்) தந்தை கசேஷ்வர். 1908 ஆகஸ்ட் 24 ராஜகுரு பிறந்த தினம்.

இந்து சாம்ராஜ்ஜியத்தை நிறுவிய மராட்டிய சிவாஜியின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதி சாகன் என்பதால் இந்து மத தத்துவங்களில் அதிக புலமை வாய்ந்த கசேஷ்வருக்கு, சிவாஜியின் கொள்ளுபேரன் ஸாஹூ மன்னன் ராஜகுரு என்ற பட்டத்தை அளித்தான்.

சிவராம் ஹரிராஜகுரு, தந்தைக்கு கிடைத்த ராஜகுரு பட்டத்தை குடும்ப பெயராக இணைத்துக்கொண்டார். ராஜகுரு கசேஷ்வர் இளைய மகன். தந்தை கசேஷ்வர் இறந்தபின் பூனாவில் அண்ணன் தினகரஹரி வீட்டில் ராஜகுரு வளர்ந்தார்.

படிப்பில் நாட்டம் செல்லாமல் சகமாணவர்களோடு எப்போதும் ஆட்டம், பாட்டம் என்று அரட்டை அடித்த ராஜகுருவை அண்ணன் தினகர ஹரி திட்டிவிட தனது 15 வது வயதில் வீட்டை விட்டு வெளியேறி தன் கையிலிருந்த ஒன்பது பைசாவுடன் 130 மைல் நடந்து காசிக்கு வந்தார்.

ராஜகுரு சமஸ்கிருதம் படிக்க ஆசிரியர் வீட்டில் தங்கி சமஸ்கிருத ஆசானுக்கு கால்கை பிடித்துவிடுவது, சமைப்பது, வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்யும் வேலைக்காரனாகி, திட்டுக்களும்,ஏச்சும் பேச்சுமாக பெற்று சிலகாலம் மட்டுமே அங்கே இருக்க முடிந்தது.

பிடி சோற்றுக்ககாக, ஜான் வயிற்று பசிக்காக அடைந்த அவமானமும் அலைகழிப்பும் துரத்தல்களும், ஏற்றத் தாழ்வான, சமூகத்தின் மீது அவருக்கு கோபத்தை ஏற்படுத்தியுது.

ஏழை, பணக்காரன் சமூக ஏற்ற இறக்கம், ஆகிய சமுதாய அவலங்கள் ராஜகுருவை சமூகத்திற்காக போராடும் போராளியாக மாற்றியுது.

கோரக்பூரிலிருந்து வெளிவந்த சுதேஷ் இதழின் துணை ஆசிரியரான முனீஷ்வர அவஸ்தியுடன் ஏற்பட்ட நட்பு இந்துஸ்தான் சோசலிஸ்ட் குடியரசு கட்சியின் உறுப்பினர் அந்தஸ்தை அவருக்கு தந்தது.

ஆயுதத்திற்குபதில் ஆயுதம், பழிக்குப் பழி, ரத்தத்திற்கு ரத்தம், பல்லுக்கு பல், கண்ணுக்கு கண் என்ற கொள்கையுடன் நாட்டுவிடுதலை, பொருளாதார சமத்துவம், ஏற்றத் தாழ்வற்ற சமத்துவ சமுதாயத்தைப் படைக்கும் கோட்பாடுகளைக்கொண்ட இயக்கத்தில் ரகுநாத் என்ற பெயர் மாற்றத்துடன் தனது புரட்சிகர கடமைகளை ஆற்றத் தயாரானார் ராஜகுரு.

புரட்சியின் விரோதி ஒருவரை டெல்லியில் தீர்த்துக்கட்ட கட்சி முடிவு செய்தது. பகத், ராஜகுரு, சிவவர்மா ஆகியோரிடம் இந்த கொலைப் பணி ஒப்படைக்கப்பட்டது.ஆக்சனுக்கு தனது ஆறு குண்டு பிஸ்டலுடன் ராஜகுரு தயார்.

அப்போது புதுடெல்லி இல்லை. மதுரா போகும்பாதை முழுவதும் காடும் வயற்காடும்தான். குறிவைக்கப்பட்ட ஆள் தினமும் மாலை ஆறு ஏழு மணிக்கு டில்லி பூங்கா அருகே உலாவருவான் என்பதும் அப்போது தீர்த்துக்கட்டவும் முடிவு செய்யப்பட்டது.

தனிநபராக சென்று முடிக்கப்பட வேண்டிய பேர்வழியை சுட்டு வீழ்த்தினார் ராஜகுரு. அடுத்த சில நிமிடங்களில் போலிஸ் அந்தப் பகுதியையே சுற்றி வளைத்தது. தப்பிக்க முயன்றார் ராஜகுரு. போலீஸ் துப்பாக்கிகள் சடசடவென வெடித்து தீ கக்கின.

தரையோடு தரையாக ஊர்ந்து கால்வாயில் மூழ்கினார். அப்படியே தவழ்ந்து வயல் வெளியில் வளர்ந்த பயிர்களுக்கு இடையே நீரில் படுத்துக் கிடந்தார். கொட்டும்பனி, கடுங்குளிர், இரவு மூன்று மணிவரை விரைத்த உடலோடு பிணம்போல் அங்கே பதுங்கி இருந்த ராஜகுரு போலீஸ் அரவம் ஒழிந்தபோது ரயில்வே லைன்வழியாக ஈரம் கசிந்த ஆடைகளோடு நடந்து வந்து மதுரா போய் சேர்ந்தார்.

யமுனை நதிக்கரையில் சேறுபடிந்த ஆடைகளை துவைத்து மணல் பரப்பில் இரவு முழுவதும் ஜட்டியுடன் படுத்திருந்து அடுத்த நாள் கான்பூர் வந்து சேர்ந்த ராஜகுருவை வேறு செய்தி அதிர்ச்சி கொள்ளச் செய்தது.

கொலை செய்யப்படவேண்டிய



படிப்பகம்

www.padippakam.com

எதிரிக்கு பதில் தவறுதலாக அப்பாவி ஒருவரை கொன்றுவிட்டதாக தோழர்கள் சொன்னபோது தன்னை தானே நொந்து கொண்டார். கண்களில் கண்ணீர் துளித்தன. இதற்காக கட்சி தன்னை தண்டிக்க வேண்டும் என்றும் எதிர்பார்த்தார்.

தூக்க கலக்கத்தில் இப்படி செய்துவிட்டாரோ என்னவோ ஏனெனில் கும்பகர்ணதூக்கத்தில் ராஜகுருவுக்கு ஈடுஇணையாருமில்லை.

ஐந்து நிமிடம் கிடைத்தாலும் தூங்கி கழிப்பதில் அவ்வளவு ஆர்வம் அவருக்கு. கோராக்பூரில் அரசு கஜானாவை கொள்ளையடிக்கும் ஆக்சனுக்கு பகத், ராஜகுரு, சிவவர்மா கொண்ட டீம் முடிவானது.

ஐந்து ரூபாய் வாடகையில் சத்திரம் ஒன்றில் இம்மூவரும் தங்கினர். நடு இரவு பலத்த மூச்சு விடும் சத்தம். விளக்கொளியில் பகத் இதை கண்டபோது அதிர்ந்தே போனார். மிகப்பெரிய நாகம் ஒன்று ராஜகுரு தலை அருகே படம் எடுத்து உஷ்,உஷ் என்று சத்தத்துடன் கொத்துவதற்கு தயாராக இருந்தது.

ராஜகுருவை எழுப்பியபோதோ ஏம்பா தூக்கத்தை டிஸ்டர்ப் செய்கிறீர்கள் தூக்கத்தில் விளையாடாதீர்கள் என்று தொடர்ந்து தூங்கி கொண்டே இருந்தார். பகத் போட்ட கூக்குரலில் பாம்பு ஓடி ஒளிந்தது. கடைசிவரை ராஜகுரு தூக்கம் கலையவில்லையாம்.

வேறொருநாள் காசிக்குப் போக வேண்டும். ரயில் நிலைய பாலத்தருகே குறிப்பிட்ட நேரத்தில் சந்தித்து பகத் சிங்குடன் சேர்ந்து ரயிலில் போக முடிவு செய்யப்பட்டது.

சரியான நேரமாகியும் ராஜகுரு வரவில்லை. குறித்த சமயத்தில் வரவில்லை என்றால் மற்றவர்கள் காத்திருக்கக் கூடாது. உடனே ஏதோ ஆபத்து என்று தப்பி விட வேண்டும் என்பது கட்சியின் முடிவு.

பகத்தும்,வர்மாவும் ரயிலேறி சென்றுவிட பாலம் அருகில் பிச்சைக்காரர்களோடு சேர்ந்து தூங்கிக் கொண்டிருந்த ராஜகுரு விழித்தபோது தன்னை தனது தோழர்கள் விட்டுவிட்டு சென்றுவிட்டது தெரிந்தது. கோபம் அடைந்த ராஜகுரு காசிக்கு சென்று தோழர்களை திட்டித் தீர்த்தார். பின்னர் தனது தூங்கு மூஞ்சி விவகாரம் தான் இதற்கு காரணம் என்று தெரிந்து வருந்தினார்.

டெல்லியில் உள்ள ஒரு சத்திரத்தில் ராஜகுரு தங்கி தூங்கி கொண்டிருந்தபோது ஏற்பட்ட வேறு அனுபவம் சுவராசியமானது.

ஒரு தாடிக்கிழவர் வந்து உங்கள் வீடு மாதிரி இதை தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்களது நண்பர்கள் இருவரும் எங்கு போனார்கள் ஓகோ இதைவிட குஜால் இடம் வேறு இருப்பது அவர்களுக்கு தெரியும்போல் அதான் அங்கே போய் இருக்கிறார்கள். உங்களுக்கு எல்லா இன்பமும் இங்கு கிடைக்கும் என்று சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் அந்த கிழவன் பேச நெளிந்தார் ராஜகுரு.

ரொம்ப வெட்கப்படுகிறீர்கள் நான் பையனை அனுப்புகிறேன் என்று சொல்லிவிட்டு சென்ற பெரியவர் சிறுவன் ஒருவனுடன் மூன்று அழகான விலை மங்கைகளை அனுப்பி வைத்து


ராஜகுரு

ராஜகுருவின் அறைக்குள் பெண்களை தள்ளினார். ஐயோ இதெல்லாம் வேண்டாம் என்று வாய்விட்டு கதறிய ராஜகுரு அந்த புரோக்கர் மற்றும் பெண்களின் பிடியிலிருந்தும் தப்பி ஓடியேவிட்டார். ஆனால் அழகியலை ரசிக்கும் ராஜகுருவோ வித்தியாசமானவர்.

புரட்சியாளர்கள் தங்கியிருந்த அறையில் அரிதாக கிடைத்த பெண் படம் போட்ட காலண்டரை ராஜகுரு மாட்டி வைத்தார். கோபமடைந்த சந்திர சேகர ஆசாத் காலண்டரை கிழித்தெறிந்தார்.

பெண்படங்களுடன் விளையாடவேண்டுமானால் ரிவால்வர் பிஸ்டல்களுடன் ராஜகுரு விளையாடுவது ஏன்? வீட்டுக்கு சென்றுவிடலாமே என்று கொப்பளித்தார் ஆசாத்.

அழகான படத்தை கிழித்துவிட்டீர்களே தாஜ்மகாலை இடிப்பீர்களா, நாம் அழகான உலகை அமைத்திட புறப்பட்டிருக்கிறோம். அழகானவற்றை அழித்துவிட்டு அதனை மீண்டும் நிர்மாணிக்க முடியாது என்று ஆசாத்திடம் சண்டைக்கு நின்றார் ராஜகுரு.

நாம் மகத்தான லட்சியத்திற்காக வீடு வாசலை துறந்து வந்திருக்கிறோம். அழகுணர்ச்சி நம்மை லட்சியப் பாதையிலிருந்து அப்புறப்படுத்திவிடும் என்று ஆசாத் வாதிட்டார்.எதிரிலிருந்து பகைவனை எதிர்க்க வேண்டுமே தவிர அங்கிருந்து ஓட்டம் பிடித்தால் அவனை எதிர் கொள்ளமுடியாது. ஐம்புலன்களையும் அடக்கி தன்னை பெரிய முனிவன் என்று சொல்லி காடுகளுக்குள் ஓடி மறைந்து உலக கவர்ச்சியிலிருந்து விடுபட்டதாக சொல்லும் போலி சாமியார்களின் வாதம் என்று ராஜகுரு சொல்ல ஆசாத் தனது தவறுக்கு மன்னிப்பு கோரினார்.ஆக்சனில் இறங்கி பல சமயங்களில் பகத் சிங் முதலாளி போல் தொப்பி—சூடிதார் அணிந்து கொள்ள வேலைக்காரனாக மாறுவேடம் அணிந்து ராஜகுரு அவருடன் தப்பி சென்றார்.

பூனாவில் சிலகாலம் கரிந்தீகர் என்ற நண்பரின் குதிரை லாயத்தில் தங்கி இருந்தார். சரத் கேஸ்வர் என்ற போலீசின் கையாளுடன் ஏற்பட்ட தொடர்பும், ஜெயகோபால் என்ற கட்சி துரோகியின் காட்டிக்கொடுக்கும் புத்தியாலும் ராஜகுருவையும், ஸாவர் காவ்கர் என்ற தோழரையும் தூங்கிக் கொண்டிருந்தபோது இன்ஸ்பெக்டர் மில் மடக்கி பிடித்து விலங்கிட்டான்.

சிறையில் அரசியல் கைதிகளுக்கான உரிமையைக்கேட்டு அடிக்கடி போராட்டம் நடத்தியபோது சிறை அதிகாரிகளை உதைத்த ராஜகுருவும் பல முறை சிறையில் தாக்கப்பட்டார்.

சாவுக்கு சவாலாக விளங்கிய சாகப்போகிறோம் என்று தெரிந்தும் எப்போதும் நகைச்சுவையாக பேசி உடனிருந்த போராளிகளை தெம்பூட்டிய அவர் தூக்கில் சிரித்த முகத்தோடு நாளைய விடுதலை ஒளிக்கீற்று தன் கண்முன் தெரிவதாக சொன்ன ராஜகுரு என்ற வீர புதல்வனின் மூச்சுக் காற்றை வெள்ளையரின் தூக்குகயிறு 1931 மார்ச் 23 நள்ளிரவு பறித்தது.

இன்குலாப் என்ற அந்த வீரனின் கடைசி வார்த்தையை......... ஜிந்தாபாத் என்று நிறைவு செய்து சமூக கொடுமைகள், சாதிய கொடூரங்களுக்கு எதிராக புரட்சி ஓங்குக என்று வீர தியாகிகளின் பெயரால் புரட்சி பாதையைக் கட்டுவோம். புல்லர்களைத் தூசி தட்டுவோம்.

**மோ. ஜேம்ஸ்**




படிப்பகம்

www.padippakam.com

# சாதீய பாகுபாடுகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன

## ஐ.நா.வில் இந்திய அரசின் அறிக்கை






இனவெறி , இனவேறுபாடு, இனதுவேஷம், இது தொடர்பான சகிப்பின்மை தலைப்பில் நடைபெறும் உலக மாநாட்டிற்கு தங்களை தலைவராகத் தேர்வு செய்தமைக்கு என்னுடைய பிரதிநிதிகளின் சார்பாகவும், எனதுசார்பாகவும் பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாநாட்டிற்கான சிறப்பான ஏற்பாடுகளை செய்து எங்களை அன்போடு உபசரிக்கின்ற தென்னாப்பிரிக்க அரசுக்கும் அதன் மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க உலக மாநாடு உங்களின் உயர்ந்த தேசத்தில் நடைபெறுவது மிகவும் பொருத்தமாகும். இனவெறிக்கு எதிராக தென்னாப்பிரிக்க நாடு நடத்துகின்ற போராட்டத்தில் இந்த அகில உலக சமுதாயமே ஈடபடுகின்ற போது அது சமத்துவத்திற்காகவும் சுய மரியாதைக்காகவும், நீதிக்காகவும் மனித இனத்தின் ஒன்றுபட்ட போராட்டத்தின் அடையாளமாக இருக்கின்றது.

இந்த நேரத்தில் வீரமிக்க ஆப்பிரிக்க மக்களுக்கு பெருமித வணக்கத்தை தெரிவித்துகொள்கிறோம். அடக்குமுறைக்கும், மி ருகத்தனத்திற்கும், கௌரவமி ன்மைக்கும் எதிராக போராடியதும் இனவெறிக்கும், இனபேதத்திற்கும் எதிராக நின்று போராடி ஒரு பிரகாசமான முன்னுதாரணமாக திகழுகின்றீர்கள்.

இனவெறிக்கு எதிரான இச்சரித்திர புகழ்மிக்க வெற்றியை நினைத்து உலக மனித சமுதாயமே இன்று நியாயமான பெருமிதம் அடைகிறது. காலனிக்கால இனவெறி பழக்கங்களின் வெறுக்கத்தக்க விளைவுகளை எதிர்கொள்ள நாம் துணிவையும் விவேகத்தையும் காட்ட வேண்டும். அடிமைத் தனமும், அடிமை வாணிபமும் எண்ணற்ற மக்களுக்குக் கடந்த கால ஆதிக்க வாதத்தையும், காலனி ஆதிக்கத்தையும் துக்கத்தையும் உண்டாக்குகிறது. சரித்திர தவறுகளைக் குறை கூறுவதில் விருப்பமில்லை. அவ்வாறு செய்தால் அது என் நோக்கத்திற்கும், செயல்பாட்டிற்கும் எதிரானது நவீன இனவெறி வெளிபாட்டை எதிர்த்துப் போராடுவதை கட்டுப்படுத்துவது போலாகும்.

எனவே இந்த மாநாடு முற்போக்கு சிந்தனையோடு உருப்படியான செயல்பாடுகளில் கவனம் செலுத்த வேண்டும். வரலாற்றில் ஏற்பட்ட தவறுகளுக்கு பதிலடிக்கொடுக்கின்ற குறுகிய வட்டத்திற்குள் நாம் சிக்கிக்கொள்ளக் கூடாது. ஆனால் அதே சமயம் கடந்த கால நிகழ்வுகளில் இருந்து எதிர்காலத்திற்கு தேவையான படிப்பினையை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். காலனி ஆதிக்கம் அழிந்திருந்தாலும்கூட பல தலைமுறையாக மக்கள் மத்தியில் இருந்த இனவெறி மனப்போக்கையும் அதன் பழக்க வழக்கங்களையும் நீக்க முடியவில்லை.

இவ்வினக்கொள்கைகளுக்கு எதிராக ஆய்வு செய்து சில உண்மைகளை முடிவாகக் கொண்டிருப்பினும், உயர்ந்த இனக் கொள்கைகள் பரப்பப்பட்டும், செயல்படுத்தப்பட்டும் வருகின்றன என்பது நம்மை கவலைப்பட வைக்கிறது.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், இனவெறியின் மனநிலையைத் தொடர்ந்து இருக்கச் செய்வதுடன், அதை வலுவடையச் செய்கிறது. அரசியல் மேடைகளும், அவர்களுடைய கருத்துக்களும், இனவெறி, இனபாகுபாட்டை சார்ந்தே இருக்கும் வெளிநாட்டவர்களை நம்முடைய எதிரியாகவும், நமக்கு போட்டியாளர்களாகவும், நமது வளர்ச்சி, கலாச்சாரம், அடையாளம் போன்றவற்றிற்கு அச்சுறுத்தலாகவும் கருதுகின்றனர். இன்றைய நவீன, மக்கள் தொடர்பு சாதனங்களை குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.


இன்டர்நெட் என்ற இணைதளம் உலகை ஒரு கிராமமாக மாற்றி இருக்கின்றது. இருப்பினும் இது இனவெறி பகையைப் பரப்புவதற்கு பலரால் பயன்படுத்தப்படுகிறது.

இந்த டர்பன் மாநகரத்தில்தான் மகாத்மாகாந்தி அவர்கள் தென்னாப்பிரிக்காவில் நடந்தேறிய இனவெறிக்கு எதிரான



படிப்பகம்

www.padippakam.com




தன்னுடைய சத்தியாகிரக போராட்டத்தை தொடங்கினார்.

1946 ம் ஆண்டு ஐ.நா. சபையில் இனவெறிக்கு எதிராக முதல்முதலாக குரலெழுப்பியதும் இந்தியாதான். நாங்கள் இனவெறியையும், இனவேறுபாட்டையும், மனித சமத்துவம், நீதி, அமைதி, முன்னேற்றம், ஆகியவைகளுக்கு எதிரானவையாக கருதுகின்றோம். அதேபோல் இவை ஐ.நா. சாசனத்திற்கும், அகில உலக மனித உரிமைப் பிரகடனத்திற்கும் எதிரானதாகும்.

எங்கள் தேசிய நிலையில் காந்தியடிகளால் உந்தப்பட்டு, டாக்டர் அம்பேத்கர் விட்டுச்சென்ற மரபாலும், முந்தைய சமூக சிந்தனையாளர்களாலும் வழி நடத்தப்பட்டு இந்திய அரசு எல்லா நிலைகளிலும் பாகுபாடுகளை எதிர்த்து போரிடுவதும் அது இல்லாது ஒழிப்பதுமான செயல்களில் உறுதி பூண்டுள்ளது. அரை நூற்றாண்டு காலமாக மனித உரிமைகளும் அடிப்படை சுதந்திரங்களும் நியாயமான கோட்பாடுகள் என்று எங்கள் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இனவேறுபாடுகள் உட்பட எந்தப் பாகுபாடுகளையும் அவை எந்த நிலையில் இருந்தாலும் அதை எங்களுடைய சட்டம் கண்டனம் செய்கிறது. இனவேற்றுமைக்கு தடைசெய்கிற பொருத்தமான சட்டங்கள் அரசியல் சட்டத் தேவைகளில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்திய தண்டனைச்சட்டம் ஒற்றுமையை குலைக்கும் எந்தக் கருத்துக்களையும் இனபேதங்களையும் சேர்த்து தடைசெய்கிறது. சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உறுதியான திட்டங்களை முன்வைத்திருக்கின்றது.

வெவ்வேறு வடிவங்களில் ஏற்படுகின்ற வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு நாங்கள் நிர்வாகத்துறையை பயன்படுத்துகின்றோம். எங்களுடைய தலையீடற்ற நீதித்துறை, விழிப்போடு இருக்கின்ற செய்தித்துறை, ஈடபாடுள்ள மக்கள் சமுதாயம் ஆகியவை சமத்துவத்தை கட்டிக்காக்கும் அரசின் முயற்சிகளை பலப்படுத்துகின்றன.

எங்களுடைய தேசம் ஜனநாயக மதிப்பீடுகள், சட்டத்தின் ஆட்சி, சகிப்புத் தன்மை, வேற்றுமையில் ஒற்றுமை ஆகியவைகளை அடித்தளமாகக் கொண்டு அமைந்திருக்கின்றது. இந்த மதிப்பீடுகளை சிதைக்க நிலவும் சக்திகளை எதிர்த்துப் போராடவும் உறுதி கொண்டுள்ளோம்.

அதேநேரத்தில் நிறைவேற்றப்படுவதற்கு இன்றும் ஏராளமாக இருப்பதை அறிகின்றபோது நாங்கள் தலைகுனிகின்றோம். அரசு அளவில் இந்த செயல்பாடுகள் முக்கியமாக இருந்தாலும், மக்களின் சமூக சிந்தனைகளின் மதிப்பீடுகள் மாறினாலொழிய இவை நிறைவு பெறாது. சட்டத்தினால் மட்டும் சமூக மாற்றங்களை வென்றெடுக்க முடியாது. எங்களுடைய சமூகத்திற்கு நீண்ட பாரம்பரியமும், பேசித்தீர்த்துக்கொள்ளும் திறமையும் இருக்கின்றது. எல்லா ஜனநாயக சமூகத்திற்கான மாற்றங்கள் கல்வியினாலும் மென்மையான அணுகுமுறையினாலும் மட்டுமே கொண்டுவர முடியும் என்பதை நன்றாக அறிவோம். எந்த மாற்றத்தையும் ஒரு இரவுக்குள் கொண்டுவர முடியாது.

எங்களுடைய அர்த்தமான பங்கேற்பை இந்த மாநாட்டில் நிச்சயப்படுத்த உருப்படியான எங்கள் தேசிய கொள்கைகளுக்கு இசைவானதாக இருக்க பிரதமர் வாஜ்பாய் எங்களுடைய வெளியுறவு துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங் தலைமையில் தேசிய குழு அமைத்திருக்கின்றார். இந்த குழு , இந்த மாநாடு சம்மந்தமானவர்களை ஆலோசித்தும், தேசிய அளவிலான உரையாடல் செய்தும் அரசு அமைப்பு சாரா இயக்கங்களின் கருத்துக்களை கேட்டும கல்வியாளர்கள், சமூகப்பணியில் உள்ளவர்களையும், சமூக பிரதிநிதிகளையும் மேலும் இந்த குழுவிற்கு உதவிய மற்றவர்களையும் ஆலோசித்திருக்கின்றது. இந்தக் குழு விரிவான ஒப்புதல் அரசியல் சட்டம் மற்றும் சட்டம் சம்மந்தமான தெளிவான, உறுதியான உடன்பாடுகளை எந்தவித வேறுபாடுகளுக்கெதிராகவும் திட்டங்களை வகைப்படுத்துகின்றது. இது மேலும் ஆழமாகப் பதிந்திருக்கும் சமூக மனோபாவங்களை புத்தாக்கம் செய்ய அழைப்பு விடுவதற்கு கவனத்தில் கொண்டது. நமது சமுதாயத்தில் சமூக மாற்றங்களை கொண்டுவர எமது நாட்டு அமைப்புகளும் நிறுவனங்களும் அரசியல் சட்டத்தை சிறப்பாக செயல்படுத்த பரிந்துரை செய்கிறது. எங்களுடைய அரசு இந்த பரிந்துரைகளைச் செயல்படுத்தும் என உறுதியாகக் கூறுகிறேன்.

இந்த உலக மநாட்டை முன்னிட்டு இந்தியாவில்


தென்னாப்பிரிக்க அதிபர் தபு. எம்பெக்கி



படிப்பகம்

www.padippakam.com

நிலவுகிறது என்று சொல்லக்கூடிய சாதிப்பாகுபாடுகள் சில நிகழ்ச்சிகளின் அடிப்படையில் தவறாகவும், மிகைப்படுத்தப்பட்டும் கூறப்படுகின்றன.

எந்த வடிவத்திலும் வெளிப்படுகின்ற இந்த தீய சக்தினய தயவு தாட்சணியமி ல்லாமல் கண்டனம் செய்கின்றோம்.


இந்த பிரச்சனை எங்கள் தேசத்தின் நிகழ்ச்சி நிரலில் மிக முக்கியத்துவமானதாக இருக்கின்றது. வரலாற்றில் ஒடுக்கப்பட்ட சாதிகளின் உயர்வுக்காக எங்களுடைய அரசு, சட்டம், சட்டத்துறை, நிர்வாகத்துறை மேற்கொள்ளும் ஆக்கப் பூர்வமான செயல்பாடுகளைப்பற்றித்தான் இப்பொழுது பேசியிருக்கின்றேன். எங்களுடைய அரசு நிறுவனங்களும், கல்வி முறைகளும் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட லட்சக்கணக்கான மக்களுக்கு குரல் எழுப்புவதற்கான அதிகாரத்தை அளித்திருக்கின்றது. இந்த தேசிய முயற்சியைத் தொடர்வதற்கு நாங்கள் தீர்மானித்திருக்கின்றோம்.

சாதி பிரச்சனையைப்பற்றி பேசுவதற்கோ, வாதம் செய்வதற்கோ இந்த மாநாடு பொருத்தமானதாக இல்லை. எந்தவொரு மாநிலமோ அல்லது தேசமோ எந்த ஒரு நிறுவனத்திற்கோ, குடிமகனுக்கோ அல்லது குழுக்களுக்கோ எதிரான வேற்றுமைக்கோ ஆதரவாக இருக்காது என்பதை உறுதியாக கூறுகிறோம். அதே நேரத்தில் பின்னோக்கி செல்லும் சமூக மனப்பான்மையை மன்னிக்கவோ, உற்சாகப்படுத்தவோ செய்யமாட்டோம்என உறுதி அளிக்கிறோம். நாங்கள் மாநில உறுப்பினர்களை சமூக அமைப்பில் ஈடுபடுத்தவில்லை. இம் மாநாடும் ஏன் ஐ.நா. சபையோ சமூகத்தில் தனி மனித நடத்தையைப் பற்றி சட்டத்தையோ, காவல்துறையையோ வைத்து நடைமுறைப்படுத்த சாத்தியமில்லை.

பலதரப்பட்ட இன வேறுபாடுகளைக் களைய அகில உலக மாநாடு மிகத் தெளிவாகக் கூறிய கொள்கைகளின் அடிப்படையில் இம்மாநாடு இனவெறி, இனவேற்றுமை, இனதுவேஷம் இது தொடர்பான சகிப்பின்மை இவற்றால் பலியானவர்களுக்கு பரிகாரம் செய்யவும், உதவிபுரியவும் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது. இனவெறிக்கெதிரான தேசிய சட்டத்தை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். தேவைப்பட்டால் அதை கடுமையாய் அமுல்படுத்தவேண்டும். தேசிய தனி நிறுவனங்கள் இத்தகைய இனவெறிப் பிரச்சனைப்பற்றி பேசப்பட வேண்டும். இவை இனவெறிக்கெதிரான போராட்டத்திற்கு தேவையான சில நடவடிக்கைகளாகும்.

ஒவ்வொரு நாடும் அந்த நாட்டில் இருக்கின்ற ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வை மேம்படுத்த ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை அறிமுகப்படுத்த இந்த மாநாடு ஊக்குவிக்க வேண்டும். சுயமரியாதை, அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு இதுபோன்ற வேறுபாடுகளுக்கு பலியான பெண்கள், குழந்தைகள் மீது சிறப்புகவனம் செலுத்தவேண்டும். அதோடு கல்வி வழியாக இளைஞர்களுடைய மனதில் சரியான மதிப்பீடுகளை விதைக்க வேண்டும்.

ஐ.நா. நிறுவனத்தின் அதன் அடிப்படை நோக்கங்களின் வழியாக இனவாதம் மற்றும் வேற்றுமைகளை எதிர்த்து போரிட தேவையான அடிப்படை வசதிகள் செய்துதரப்படவேண்டும். பன்னாட்டு சபை, தேசிய பாராளுமன்றங்களில் இந்த நோக்கங்களைப் பிரதிபலிப்பது போன்ற சிந்தனைகள் உற்சாகப்படுத்தப்பட வேண்டும். இந்த மாநாடு




சகிப்புத்தன்மையையும், புரிந்து கொள்ளும் தன்மையையும் வளர்ப்பதற்கு மக்கள் தொடர்பு சாதனங்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

உலகின் மிக பழமையான நாகரீகத்தைக் கொண்டிருக்கும் இந்தியா தன்னுடைய பொறுப்புகளை நன்றாகவே உணர்ந்திருக்கின்றது. இந்த மாநாடு முன்வைத்துள்ள, அனைவருக்கும் பொதுவான இலட்சியங்களையும், கோட்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு உங்கள் பிரதிநிதிகளோடும், மற்ற பிரதிநிதிகளோடும் மிகவும் நெருக்கமாக சோர்வின்றி உழைப்போம் என உறுதி அளிக்கின்றோம்.

நன்றி வணக்கம்!



மாநாட்டில் பங்காரு லட்சுமணன்

---

**31–08–2001 முதல் 08–09–2001 வரை தென்னாப்பிரிக்க டர்பன் நகரில் நடைபெற்ற இனவெறிக்கெதிரான உலக மாநாட்டில் இந்திய அரசின் சார்பாக மத்திய அமைச்சர் உமர் அப்துல்லா அவர்களால் சமர்பிக்கப்பட்ட அறிக்கை.**

**தமிழில் மொழியாக்கம்**
**சுடர்மணி**



படிப்பகம்

www.padippakam.com

# அணு உலைக்கு அமுக்கிய பஞ்சமி நிலங்கள்!

உலகப்போர் ஏற்பட்டாலோ இந்தியா அண்டை நாடுகளுடன் போரிட நேர்ந்தாலோ எதிரிகளின் தாக்குதலுக்கு முதல் இலக்காகப் போவது கல்பாக்கம் அணுமின் நிலையம்தான் என்பது பரவலாகப் பேசப்படும் உண்மை.

மிக, மிக ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய இந்த அணுமின் நிலையம் காஞ்சிபுரம் மாவட்டத்தின் கிழக்கு கடற்கரை சாலையில் சென்னையிலிருந்து சுமார் 100 கி.மீ தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் அணுமின் நிலையம் துவங்கப்பட்டதற்கான முக்கிய காரணம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் குறிப்பாக கல்பாக்கம் சுற்றியுள்ள பகுதிகளில் பெரும் வாரியாக வசித்து வந்தது தலித் மக்களே. பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இவர்கள் கைவசமே இருந்தன. அதோடு தலித் மக்களுக்குச் சேர வேண்டிய பஞ்சமி நிலங்களும் இப்பகுதியில்தான் அதிகம். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் ஆபத்தான அணுமின் நிலையமும் இங்கு நிறுவப்பட்டதாகப் பரவலாகப் பேசப்படுகிறது.

இந்த அணுமின் நிலையம் ஏற்படுத்துவதற்கு நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. இதில் பெரும்பாலும் தலித் மக்களுக்குச் சொந்தமான நிலங்களே. நிலத்தை இழந்த பலர் அதற்குரிய இழப்பீட்டையோ மாற்று இடத்தையோ வேலைவாய்ப்பையோ இதுவரையிலும் பெறமுடியாத நிலையில் இருப்பதுதான் கொடுமை.


அரசு கட்டிக்கொடுக்கும் கொட்டகை வீடுகள்

இந்நிலையில் 1991 ம் ஆண்டு 500 மெகாவாட் திறன் கொண்ட அணு மின் நிலையம் புதியதாகக் கட்டப்பட்டது. இதற்காகக் கொய்கைக்கரை மேட்டு கிராமத்தில் சுமார் 282 ஏக்கர் நிலங்களை 4/1 என்ற சட்டவிதியின் கீழ் கைப்பற்றப் பட்டது. இதனால் இந்த கிராமத்தில் வசித்து வந்த மக்கள் வெளியேற வேண்டியதாயிற்று. பாதிப்பிற்குள்ளான இம்மக்களுக்கு வீட்டு மனை, காங்கிரீட் வீடு, குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு என மேற்சொன்ன இழப்பீட்டு உதவிகளை செய்வதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டது.

இதில் சுமார் 40 தலித் குடுமபங்கள் எந்தவிதஆதாயமுமின்றி



கிராம பெண்கள் விடுதலை கல்வி சங்கத்தின் தலைவி டி. நீலாவதி இதைப்பற்றி நம்மிடம் கூறியதாவது. சார். நாங்க 5 தலைமுறையாக இந்த இடத்தில்தான் இருந்து வருகின்றோம் எங்களுக்கு இந்த எடத்த விட்டா வேறு போக்கு இடம்கூட இல்லாத கூலி விவசாயிங்க நாங்க. இங்க 38 தலித் குடும்பங்கள் மட்டும் தான் உள்ளன. இப்போது புதுசா துவங்கும் அணு உலைக்காக 282 ஏக்கர் நிலத்தை 1991 ல் எடுத்தாங்க. அதில் எங்க இடமும் அடங்கும். அப்போ நாங்க அணுவாற்றல் துறையினரிடமும் மாவட்ட நிர்வாகத்திடமும முறையிட்டு எங்களுக்கு மாற்று இடம் அதில் காங்கிரீட் போட்ட வீடு (தொகுப்பு வீடு) மற்றும் 38 குடும்பத்திற்கு அவர்கள் தகுதிக்கு ஏற்றாற்போல்ஏதாவது வேலை கேட்டோம். அதைப்பற்றி எந்த உறுதியையும் கொடுக்காம எங்கள காலி செய்வதிலேயே உறுதியாக இருந்து வருகிறது நிர்வாகம்.

38 தலித் குடும்பங்களும் இங்கு பல ஆண்டுகளாக வசித்து வருவதால் சிலர் ஓடு போட்ட வீடும் சிமெண்ட் சீட் போட்ட வீடும் கட்டி வசித்து வருகின்றோம்.

இந்த நிலமையில் இப்போது 38 பேரில் 13 பேருக்கு மட்டும் கேட்டு? அதற்கு மண்சுவர் வைத்த ஓலை குடிசைகளைப் போட்டு கொடுத்து எங்கள அங்க போங்க என மிரட்டி வருகிறது மற்றவர்களுக்கு இடமும் ஒதுக்கல. நாங்க எப்படிசார் வாழரது. இது சம்பந்தமாக 91 லிருந்து இன்றுவரை மாவட்ட கலெக்டர், முதல்வர் என மனு போட்டுக்கிட்டுதான் இருக்கிறோம்.

நாங்க தலித் என்பதால் எங்களை நிர்வாகம் ஒரு பொருட்டாகவே நினைக்கல சார். சதுரங்கப்பட்டினம் வி.ஏ.ஓ வாக உள்ளவர் குமார் மேல் சாதிகாரர் (முதலியார்) என்பதால் எங்கள அலட்சியப்படுத்துவதோடு இல்லாமல் எங்கள் கோரிக்கைகளுக்கு மாறாக தவறான தகவலை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவித்து வருகிறார். வி.ஏ.ஓ கிட்ட ஏதாவது சான்று மற்றும் தகவல் கேட்டா காலனிக்காரங்களுக்கு எல்லாம் எதுக்குடா கோரிக்கை. மரியாதையா இந்த இடத்தை விட்டுட்டு ஓடிப்போயிடுங்க என சாதிப் பெயரைச் சொல்லி ஏளனமாகப் பேசி வருகிறார். 25 பேருக்கு இடத்தை ஒதுக்கக்கூடாது என இந்த வி.ஏ.ஓ முட்டுக்கட்டை போட்டு வருவதாக திருக்கழுகுன்றம் வருவாய் துறையில் சொல்றாங்க



படிப்பகம்

www.padippakam.com

மாற்று வழி ஏற்படுத்திக்கொள்ளமுடியாத மிகவும் ஏழ்மை நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அரசுத் தரப்பில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளோ காற்றில் பறக்க விடப்பட்டுள்ளது. நிலம் கொடுத்த தலித் மக்கள் ஊதாசீனப்படுத்தப் பட்டிருக்கிறார்கள் அநியாயமாகத் தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என அறிந்து கொண்ட தலித் மக்கள் தமிழக அரசுக்கும் வருவாய் துறை அமைச்சருக்கும் சம்பந்தப்பட்ட நிர்வாகங்களுக்கும் மனுக்கள் அனுப்பியும் ஒரு பலனுமில்லை.

தமிழக அரசு வருவாய்த்துறை அதிகாரிகள் திருக்கழுகுன்றம் வட்டாட்சியர் ஆதிதிராவிட நலத்துறை வட்டாட்சியர் செங்கல்பட்டு, மாவட்ட சார் ஆட்சியர் செங்கல்பட்டு, மாவட்ட ஆட்சியர் காஞ்சிபுரம் ஆகியோருக்கு கடந்த 08-11 2000. 08-12-2000, 22-02-2001, 16-04-2001, 22-05-2001, 26-05-2001 23-07-2001 மற்றும் ஆகிய தேதிகளில் கோரிக்கை மனுவை தபால் மூலமாகவும் நேரிலும் கொடுத்துள்ளனர் பாதிக்கப்பட்ட மக்கள்.

ஆனால் அரசு அதிகாரிகளோ முன்னுக்குபின் பல முரணான செய்திகளை மக்களுக்கு தெரிவிப்பதோடு மட்டுமல்லாது அப்பாவி மக்களை மிரட்டியும் வருகின்றனர். இதுபற்றி அணுவாற்றல் துறை சி.ஏ.ஓ , தலைமை அணுவாற்றல் துறை நிர்வாக அதிகாரிகளிடம் கேட்டபோது.

நாங்க 1991 ல் இடத்தை காலி செய்ய சொல்லி நோட்டீஸ் கொடுத்துட்டோம் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டியது வருவாய்த்துறைதான்.

இப்ப கட்டும் வீடுகூட வருவாய்த் துறை மூலமாகதான் கட்டி கொடுத்துவராங்க இதில ஒன்னும் நாங்க செய்ய முடியாது எல்லாம் மும்பை தலைமை அலுவலகம்தான் முடிவு செய்ய வேண்டும் என மழுப்பலாக தொலைபேசியை துண்டித்தார்.

– பதவி


காளிதாசன்

சார் நிலம் கொடுத்தவர்களுக்குவேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுப்பதாக கூறி எங்களுக்கு ஒரு சான்றிதழ் கொடுத்திருக்காங்க அதை வைத்து இன்டர்வியூ வந்தா எடுத்து வா என்று சொன்னாங்க அதன்படி எனக்கு 02.03.1999 அன்று கார்பெண்டர் வேலைக்கு இன்டர்வியூ வந்தது. அதுல நில எடுப்பு சான்றிதழ் கொண்டுவந்தால் வேலை என்றிருந்தது. நானும் தேர்வுக்கு போனேன் நான் தலித் என்பதால் என்னை தனியாக வைத்து விசாரித்து விட்டு ஏதும் சொல்லாமலேயே அனுப்பி விட்டார்கள். அதன்பிறகு என்ன சார் இந்த நில எடுப்பு சான்றிதழை வைத்துக்கொண்டு என்ன செய்யமுடியும் சார். எங்க நிலத்தையும் கொடுத்துட்டு வீட்டையும் இழந்து அணு கதிர்களால் பாதிக்கப்படுவது என்னவோ நாங்கதான். ஆனா வேலைகள் மட்டும் எங்களுக்கு கிடையாது. வெளி மாநிலத்தில் இருந்து வரும் உயர் சாதியை சேர்ந்தவர்களுக்கு தான் என வேதனைப்பட்டார் காளிதாசன் என்ற தலித் இளைஞர்.

## களத்திலிருந்து..... கடிதங்கள்!




அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம் சார்பாக சென்னையில் நடைபெற்ற மாநாட்டில் இரா. அதியமான் அவர்கள் பேசியதாக களம் இதழில் குறிப்பிட்டிருந்த சக்கிலிய விடுதலையே தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்கு நிபந்தனை என்ற கூற்று நூற்றுக்கு நூறு உண்மையானது. தலித் உட்பிரிவுகளுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தி எங்களைப் போன்றவர்களுக்கு உற்சாகத்தை கொடுக்கும் களத்திற்கு நன்றி.

பழனியம்மாள் மதுரை.

---

*ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்! தங்களது மக்கள் களத்தில் சேரி மக்களின் சோக நிகழ்வுகளை எந்தவித ஒளிவு மறைவின்றி வெளியிட்டு புதிய விடியல்களுக்கான களம் அமைத்து வெளியிடும் தங்களது முயற்சிக்கு எங்களது இராமபாய் அம்பேத்கர் அறக்கட்டளை என்றும் துணை நிற்கும் என பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

**ஆர். சக்திவேல் ஆயில்பட்டி நாமக்கல்.**

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நான் சில மாதகாலமாக களம் பத்திரிக்கையை படித்து வருகிறேன். தமிழகத்தில் தலித் மக்களுக்கு நடக்கும் கொடுமைகளைப்பற்றி படிக்கும்போது நானும் களத்திலிருந்து தலித் மக்களின் விடுதலைக்காகப் போராட வேண்டும் என்று எனக்குள் ஒரு உணச்சியை உண்டாக்குகின்றது.

எஸ்.டி. ஜெயராமன் பனையடிப்பட்டி சிவகாசி.

---

பூலான்தேவி ஒரு கொள்ளைக்காரி என பல பத்திரிக்கைகள் சித்தரித்து எழுதிக்கொண்டிருக்கும் நிலையில் ஆசிரியர் அவர்கள் தலையங்கத்தில் பூலான் தேவியை ஒரு சமுதாய போராளியாக காண்பித்துள்ள விதம் சிறப்பானது. ஆதாரபூர்வமானது. உரிமைக்காக போராடிய பூலான்தேவியைக் கொள்ளைக்காரியாக பார்ப்பவர்கள் சமூக விரோதிகள் என்ற ஆசிரியரின் சவுக்கடி அருமை

ஏ. குமார் திருப்பத்தூர்.



படிப்பகம்

www.padippakam.com

# வளைக்கப்பட்ட

கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் தொகுதிக்குட்பட்ட ஒரு மலை கிராமம் கே.என் பேட்டை என்கிற குமார நாயகன் பேட்டை. இயற்கைச் சூழலுக்கு பஞ்சமில்லாத ஒரு அழகான பகுதி. இந்த மலைப் பகுதி முழுவதிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமே சுமார் 100 க்கும் அதிகமான குடும்பங்கள்



MNTN ன் ஆடம்பர பங்களா

பல ஆண்டுகளாக வாழ்ந்துவருகின்றனர். இங்கு வாழும் மக்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதால் எல்லாவித அடிப்படை வசதிகளும் மறுக்கப்பட்டே வந்தன. குடிநீர், மின்சாரம், சாலை போன்ற எந்த அடிப்படை வசதிகளையும் இந்த மக்கள் உணர்ந்ததேயில்லை. இம்மக்களை கண்டுகொள்ள எவருமே இல்லை. இதுகுறித்து தலித் மக்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும், போராடியும்கூட அகதிகளாக வாழ்ந்துவந்தனர். இந்நிலையில் இங்குள்ள தலித் மக்கள் வேறு வழியின்றி தங்கள் குடியிருப்புப் பகுதிகளை மலை அடிவாரத்திற்கு மாற்றிக்கொண்டனர். இருப்பினும் ஏற்கனவே தாங்கள் வாழ்ந்து வந்த மலைப்பகுதியை விட்டுவிடாமல் அங்கிருந்த அம்மன் கோயிலை பராமரித்து வழிபட்டு வந்தனர். தங்களுக்கு சொந்தமான மலைப்பகுதியில் விரைவிலேயே அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி மீண்டும் அங்குக் குடியேறிவிடலாம் என்று திட்டம் தீட்டியிருந்தனர். ஆனால் இவர்களுடைய திட்டத்திற்கு மண்ணள்ளி போட்டு எமனாய் வந்து அமைந்தது எம்.என். டி. என் என்ற தொண்டு நிறுவனம். ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காகவும் உழைக்கின்றோம் எனக் கூறி உள்நாட்டு, வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுவரும் இந்த நிறுவனம் கே.என் பேட்டை தலித் மக்களின் பட்டா நிலங்களை அபேஸ்பண்ண திட்டம் தீட்டியது. புது கேஸ் பேட்டை பெருமாள் என்ற தி.மு.க பிரமுகரின் மகன் ராஜேந்திரன் இவர் கே.என் பேட்டைக்கு அருகில் உள்ள கிராமமான பாதிரி குப்பத்தில் மேற்சொன்ன MNTNஎன்ற தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகின்றார். ஆரம்பத்தில் மிகச் சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் கடலூர் மாவட்டத்தில் தற்போது பல மகளிர் குழுக்களை ஆரம்பித்து கொடிகட்டி பறந்துகொண்டு வருகின்றது. மக்களின் மீதுள்ள அக்கறையை விட தங்களுடைய சொந்த வளர்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்படுவதாக இந்நிறுவனத்தின் மீது பலவித புகார்கள் எழுந்த வண்ணமாக இருக்கின்றன.



DYFI தோழர்கள்

கடலூர் மாவட்டத்தில் மற்ற பகுதிகளில் ஆரம்பித்த மகளிர் மன்றங்களைப் போலவே கே.என் பேட்டையிலும் இந்நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நேரத்தில்தான் கே.என் பேட்டை தலித் மக்களுக்குச் சொந்தமான மலைப்பகுதியிலிருந்த 12 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தின் மீது இந்த நிறுவனத்தை சார்ந்த ராஜேந்திரனுக்கு கண் பதிந்தது. இந்த நிலங்களை எப்படியாவது வளைத்து போட்டுவிட வேண்டும் என திட்டம் தீட்டிய ராஜேந்திரன் அதற்கான காரியங்களில் மிக வேகமாக இறங்கினார். தன்னுடைய MNTN தொண்டு நிறுவனத்தின் மூலம் கே. என். பேட்டையில் முதியோர் இல்லம் ஆரம்பிக்கப் போவதாகவும் இதனால் கே. என் பேட்டை தலித்த்களை முதியோருக்கான இல்லத்தில் சேர்த்துக்கொள்வதாகவும், சுமார் 20 பேருக்குமேல் வேலை வாய்ப்புத் தருவதாகவும் இதற்கு குறைந்தது ஒன்றரை ஏக்கர் நிலமாவது தேவைப்படுகிறது. சும்மா இருக்கின்ற 12 ஏக்கர்



படிப்பகம்

www.padippakam.com

# மலைக்கிராமம்!

மலைப்பகுதி நிலத்தை எங்க நிறுவனத்திற்கு கொடுத்தால் கண்டிப்பாக அதை நீங்கள் பயன்பெறும் விதத்தில் எங்க வேலை இருக்கும் என ராஜேந்திரன் புருடா விட அதை நம்பிய தலித் மக்கள் ஊர் கூட்டம் போட்டு முடிவு செய்து ஒன்றரை ஏக்கர் நிலத்தை MNTN நிறுவனத்திற்கு வழங்கினர். முதியோர் இல்லம் வேலைவாய்ப்பு என்று பேசி வந்த ராஜேந்திரன் பின்னர் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் வேறு ஒரு கணக்குப்போட ஆரம்பித்தார்.






மக்கள் கொடுத்த ஒன்றரை ஏக்கர் நிலத்தோடு திருப்தி அடையாத ராஜேந்திரன் மக்களுக்கு சொந்தமான 12 ஏக்கரையும் வளைத்துப்போட திட்டம் தீட்டினார். சந்தீப் சக்சேனா கடலூர் மாவட்ட ஆட்சிதலைவராக இருந்த நேரத்தில் தன்னுடைய தந்தையின் அரசியல் செல்வாக்கினாலும் அதிகாரிகளை தன் பணபலத்தினாலும் வளைத்துபோட்டு 12 ஏக்கர் நிலத்தையும் சுற்றி வேலி போட்டு வளைத்து தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். அதோடு மக்கள் காலங்காலமாக வழிபட்டு வந்த அம்மன் கோயிலையும் JCP இயந்திரத்தின் மூலம் நிரவ 12 ஏக்கர் நிலத்தையும் சமன் செய்தார். ஒரு பெரிய கட்டிடத்தையும் கட்டி முடித்தார். அந்தப் பகுதி முழுவதிலும் மரக்கன்றுகளை நட்டு வைத்தார் ஆனால் மக்களிடம் வாக்கு கொடுத்ததுபோல எந்தவித முதியோர் இல்லமும் அங்கு ஆரம்பிக்கப் படவில்லை. இதை அறிந்த கே.என் பேட்டை மக்கள் ராஜேந்திரனிடம் போய் நியாயம் கேட்டனர். எந்த பதிலையும் சொல்லாத ராஜேந்திரன் உடனே திருப்பாப்புலியூர் காவல் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் கே.என் பேட்டை தலித் மக்கள் என்னை அடிக்க வந்திருக்காங்க என பொய்யான ஒரு தகவலை கொடுத்தார். சுமார் 100 க்கும் அதிகமான போலிசார் டி.எஸ்.பி பாலசுப்பிரமணியன் இன்ஸ்பெக்டர் பெத்தையன் தலைமையில் ஏதோ பயங்கரவாதிகளை பிடிப்பதைப்போல கே.என். பேட்டை கிராமத்தை சுற்றி வளைத்தனர்.

தேவநாதன், கரியன், குமார், கிருஷ்ணன், வெற்றி, ராஜா, முருகவேல், மாயக்கிருஷ்ணன், குப்புராஜ், வீராசாமி, கணேசன், விஜயகுமார், ராமலிங்கம், பாபு, உட்பட பலரை காவல் நிலையத்திற்கு வரச் சொல்லி விசாரித்து அனுப்பிவிடுகின்றோம் எனக் கூறி அனைவரையும் எந்த காரணமும் இல்லாமல் கைது செய்து சிறையிலடைத்தனர்.

கடலூர் சட்ட மன்ற உறுப்பினர் இள. புகழேந்தியின் அத்தை இந்த MNTN என்ற நிறுவனத்தில் இருப்பதாலும், பல வித செல்வாக்குகளையும் பெற்றிருக்கும் ராஜேந்திரன் கே.என். பேட்டை தலித் மக்களை கிள்ளுக்கீரையாக நினைத்துக்கொண்டு ஏமாற்றி வருகின்றார். இவருக்கு காவல் துறையும் அரசு அதிகாரிகளும் பக்கபலமாக செயல்பட்டு வருகின்றனர். எந்தக் கொம்பனாலும் என்னை ஒன்னும் செய்ய முடியாது எனக்கூறிக்கொண்டு வரும் ராஜேந்திரன் முதியோர் இல்லம் அமைக்கப் போவதாக சொல்லிக் கொண்டிருந்த இடத்தில் பலான தொழில் நடத்திக் கொண்டு வருவதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாங்கள் எந்த அரசியல் பலத்தையும் களத்திலிருந்து எதிர்கொள்வோம் என்று போராட்ட வியூகம் அமைத்துக்கொண்டிருக்கின்றனர் ஜனநாயக வாலிபர் சங்கத்தினரும், அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தினரும்.

– கோட்டைபாபு



படிப்பகம்

www.padippakam.com

# தலித் உரிமைக்கு குரல் கொடுத்த

இனவெறி, இனப்பாகுபாடு, இனத்துவேஷம் மற்றும் இவற்றோடு தொடர்புடைய சகிப்பின்மைக்கு எதிரான இந்த உலக மாநாடு, உண்மையில் ஒரு கண்ணாடியாக நம் ஒவ்வொருவரின் ஆன்மாவிற்கு முன்னால் நிற்கின்றது.

ஆகவே, நாம் கூறுகின்ற கருத்துக்கள் உண்மையானதாகவும், உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிவருப்வையாகவும் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில், இதுவரை நடந்த ஐ.நா. சபை மாநாடுகளிலே இந்த மாநாட்டைப் போல, வரலாற்று அநீதிகளை அடையாளம் கண்டுகொள்வதற்கான அழுத்தமான தேடல் இருந்ததில்லை.

உலகின் பல்வேறு பகுதிகளில் சமத்துவமின்மை அல்லது அநீதி சம்பந்தப்பட்ட பிரச்சனைகளால் மக்கள் பாதிக்கப்பட்டு, அந்த பாதிப்பினை முறையிடுவதற்கு ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர் என்று திருமதி. ராபின்சன் கூறியிருப்பது சரியானதே.

உண்மையில் உலகின் எந்தவொரு நாடும் மேற்கூறிய பாதிப்பிலிருந்து விடுபடவில்லை. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல.




இந்திய தேசிய மனித உரிமை ஆணையத்தின் சார்பாக இந்த மாநாட்டிற்குப் பேச வந்திருக்கும் நான்


நீதியரசர் கே. ராமசாமி

எங்களுடைய நாட்டில் சமத்துவமி ன்மையாலும் பாகுபாடுக ளினாலும் அநீதி இழைக்கப்பட்ட மக்களின் பகிர்வினுக்குச் செவிமடுப்பதை எனது கடமையாகக் கருதுகிறேன். குறிப்பாக இந்திய அரசியல் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தலித்துக்கள் மற்றும் ஆதிவாசிகளின் குரலுக்கு செவிமடுக்க விழைகின்றேன். இவர்களின் உரிமைகளை பாதுகாப் பதற்காகவே எமது ஆணையம் உள்ளது.

இவர்களுடைய கருத்துக் களைக் கேட்கவும் இவர்களுடன் கல்வியாளர்கள் மற்றும் மனித உரிமை மீ ட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்காக, எமது ஆணையம் ஆகஸ்ட்டு 2001-ல் இரண்டு ஆலோசனைக் கூட்டங்களை பெங்களூர், டெல்லியில் முறையே நடத்தி இந்த மாநாட்டிற்காகக் கருத்துக்களைச் சேகரித்தது. கூடவே இந்த மாநாட்டிற்கான தயாரிப்புக் குழுவின் கருத்துக்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டது.

மேலும் ஜூன் 2001-ல் திரு. ராஜேந்திர குணசேகரே அவர்கள் மனித உரிமைகளை பாதுகாக்கும் துணை ஆணையத்திற்காகத் தயாரித்து அளித்த கட்டுரைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு இவற்றின் பின்னணியோடு தேசிய மனித உரிமை ஆணையத்தின் கருத்துக்களை இந்த மாநாட்டில் பேச விழைகின்றேன்.

உலகின் மற்ற நாடுகளைப் போலவே இந்திய நாட்டு வரலாறும், சமுதாயமும் பாகுபாடுகளினாலும், சமத்துவமின்மையாலும் கடுமையாகக் காயப்பட்டுள்ளது என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இத்தகைய அநீதியை அடையாளம் கண்டு இந்த அநீதிக்கு சமாதிக் கட்ட இந்திய அரசியல் சட்டம் அடிப்படை உரிமைகள் பற்றிய பகுதி III எல்லாவகையான பாகுபாடுகளை எதிர்த்து போராடு வதற்கான சக்தி வாய்ந்த பாதுகாப்பு முறைகளை, வழிகளை உள்ளடக்கி இருக்கின்றது. இப்படிப்பட்ட வழிமுறைகள்




படிப்பகம்

www.padippakam.com

# இந்திய மனித உரிமை ஆணையம்

நீதியானவையே. இந்தியா ஆக்கபூர்வமான செயல்பாட்டுத் திட்டத்துடன் நடைபெறுகின்றது என்று ஓரளவிற்கு கூறமுடியும். 54 ஆண்டுகால சுதந்திர வரலாற்றில் மக்களின் திறமைகளின் மேல் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து, அவர்களை ஜனநாயக வழியில் பல்வேறு மாற்றங்களை நோக்கி பீடுநடைபோட இந்தியா செய்துவருவது சிறப்பான அம்சமாகும். தேசிய மனித உரிமை ஆணையம் ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகள் 'அனைத்தும்-இந்தியா உள்பட ஐ.நா.சபை ஏற்படுத்தி உள்ள அகில உலக அளவிலான மனித உரிமை களை மதிப்பதும் அவைகளை தவறாமல் கடைபிடிப்பதும் கடமையாக மேற்கொள்ள வேண்டுமென நம்புகிறது. இக்கட்டத்தில் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993 பகுதி 2 (d) மனித உரிமைகள் என்றால் தனிநபரின் வாழ்வு, சுதந்திரம், சமத்துவம், மற்றும் மாண்பு போன்றவற்றுடன் தொடர்புடைய உரிமைகள் என்று கூறியிருக்கும் விளக்கம் எமது அரசியல் சட்டத்திலும் அல்லது அகில உலக உடன்படிக் கைகளிலும் உள்ள கருத்தே ஆகும். மேற்கூறிய கருத்தின் ஒளியில் தேசிய மனித உரிமை ஆணையமானது, மனித உரிமைகள் பற்றிய கருத்துப் பரிமாற்றம் அது தேசிய அளவினாலும்சரி அகில உலக அளவிலும் சரி மனித உரிமைகளை மேலும் பாதுகாத்திட வளர்த்திட வழிவகை செய்திடும் எனக் கருதுகின்றது. அதற்கு இந்த மாநாடு பாகுபாடுகள் மற்றும் சமத்துவமின்மை தொடர்பாக உலகின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்ற வெவ்வேறு வடிவ பிரச்சனைகளைப் பற்றி துணிச்சலுடனும், திறந்த உள்ளத்துடனும் கலந்துரையாடுவதற்கு அருமையானதொரு வாய்ப்பினை நமக்கு அளித்துள்ளது. இச்சூழலில்




இதில்தான் நல்ல அரசு, தன்னார்வ இயக்கங்கள், தேசிய நிறுவனங்கள் மற்றும் அக்கறையுள்ள சமுதாய நபர்கள் அனைவரின் ஆக்கபூர்வமான பங்கினை, ஆணையம் மிகவும் மதிக்கின்றது. அனைத்து தரப்பினரும் தம்மிடையே உள்ள பிரிவினைகளை கடந்து, மனித உரிமைகளை மேலும் வளர்த்தெடுக்க முன்வரவேண்டும் என அழைப்பு விடுக்கின்றது. ஆணையம் எப்படிப்பட்ட பாகுபாடு என்பதைப் பற்றி ஆராய்வதைக் காட்டிலும், ஏன் இத்தகைய பாகுபாடு இன்னமும் விடாமல் தொடர்கிறது என்பதைப்பற்றி ஆராய்வதே நல்லதாகும். இந்த அடிப்படையில் சாதிக்கும், இனவெறிக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை பகுப்பாய்வு செய்வது மையநோக்கமாக இருந்திடக்கூடாது. இந்திய அரசியல் சட்டப்பிரிவு எண்15, எல்லாவிதமான பாகுபாடுகளையும் தடை செய்கிறது; பாகுபாடுகளை ஒழிக்க அழைப்பு விடுக்கிறது.



மாநாட்டில் தலித் உரிமைகளுக்காக

மேற்கொண் டுள்ள பொறுப்புகளில், தலையாயப் பொறுப்பு- தலித்துக்கள், ஆதிவாசி களுக்கு எதிரான பாகுபாடுகளை அறவே ஒழிப்பது. குறிப்பாக இவர்களை அதிகமாக பாதிக்கும் மனித கழிவுகளைக் கையால் அகற்றுவதை ஒழிப்பதும், கொத்தடிமை தனத்தை ஒழிப்பதும் ஆகும். பெரிய திட்டங்களினால், குறிப்பாக பெரிய அணைகள்



படிப்பகம்

www.padippakam.com




கட்டுவதனால், இடம்பெயரச் செய்யப்பட்டு அதிக பாதிப்பிற்குள் ளாகும் மக்களின் உரிமை களுக்காக,சிறப்பாக ஆதிவாசிகளின் உரிமைகளுக்காக ஆணையம் தலையிடுகின்றது. பாகுபாடு, அநீதி மற்றும் சமத்துவமின்மையை ஒழிப்பதற்கான போராட்டப் பயணமானது நெடியதும், அவ்வப்போது சோர்வூட்டும் ஒன்றாகும் என்பதை ஆணையம் உணருகின்றது. ஆனால் இந்திய அரசியல் சட்டம் இப்போராட்டத்திற்காக நல்லதொரு பாதையை வழிவகுத்துள்ளது என்று ஆணையம் ஆணித்தரமாக நம்புகிறது. சட்டரீதியான, ஆக்கபூர்வமான செயல்திட்டங்கள் நிறைய உள்ளன; ஆனால், அவற்றை நடைமுறைப் படுத்துவதில்தான் நிறைய வளர வேண்டியுள்ளது. இந்திய அரசியல் சட்டம் கூறியுள்ள எந்த வகையான பாகுபாடும்- அது இனவெறி, சாதி, தலைமுறை- மனித உரிமைக் கெதிரான, மனித மாண்பினைச் சீரழிக்கும் தீங்குகளாக ஆணையம் நம்புகின்றது. நம்நாட்டில் செயல்படும் அரசுசார்ந்த அதிகார அமைப்புகளும், அரசு சாராத பணிக்குழுக்களும் ஒன்றிணைந்து சமுதாயத்தில் வலுவிழந்த தலித்துக்கள், ஆதிவாசிகளுக் கெதிரான வரலாற்று அநீதிகளை வெற்றிகொள்ள முடியுமென நம்புகின்றது. இப்படிச் செய்வது, ஒரு தேசிய அளவிலான பொறுப்பும், தார்மீகக் கடமையும் ஆகும் என ஆணையம் கருதுகின்றது. இறுதியாக தலித் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது என்பது அவர்களை முழுமையாக, முறையாக சக்தியுடையவர்களாக்குவதில் உள்ளடங்கியுள்ளது என்று ஆணையம் நம்புகின்றது. இந்த அடிப்படையில்தான், தேசிய அளவிலும், மாநில அளவிலும் இவர்களுக்குப் பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென முன்மொழிகின்றது; 14 வயது வரை இவர்களுக்கு இலவசமாக கட்டாய ஆரம்பக் கல்வி அளிப்பது; ஆரம்ப சுகாதார நிலையங்கள் வழியாக மருத்துவ வசதிகளை வழங்குவது என்று பல்வேறு திட்டங்களைப் பரிந்துரை செய்கிறது. மேலும் இச்சமுதாயத்திலிருந்து தீண்டாமையால் பாதிக்கப்படும் நபர்களின் மனுக்களைப்பெற்று அவர்களுக்குரிய உரிமைகளை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது. தலித்துக்களின் பொருளாதார மேம்பாடும் அவர்களுக்கு அதிகாரத்தை அளிப்பதுமே சாதிக்கு எதிராக சரியாகப் போராடுவதற்கான கருவியாகிட முடியும். ஆகவே, பொருளாதார அளவில் வளருவதற்கு அதிக வாய்ப்புகள் உருவாக்கப்படவேண்டும்

---

**31.08.2001 முதல் 08.09.2001 வரை தென்னாப்பிரிக்க டர்பன் நகரில் நடைபெற்ற இனவெறி எதிர்ப்பு உலக மாநாட்டில் இந்திய தேசிய மனித உரிமை ஆணையத்தின் சார்பாக நீதியரசர் டாக்டர் கே. ராமசாமி அவர்களால் சமர்பிக்கப்பட்ட அறிக்கை.**

*தமிழில் - வளன் பாதை*

## ஐ.நா. அரங்கில் சாதியா? தீண்டாமையா?

டர்பனில் நடந்த மக்கள் அமைப்புகளின் மாநாட்டில் பலரும் இந்தியாவில் சாதியம் ஒழிக்கப்பட வேண்டும் என்று விவாதிக்கையில் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க நிறுவனர் யேசுமரியான் அவர்கள் கீழ்கண்ட ஒரு விளக்கத்தை கொடுத்தார்.

சாதியம் என்பதும் சாதிய வேறுபாடுகள் என்பதும் தீண்டாமை என்பதும் தனித்தனியே தீர்க்கப்பட வேண்டியவை. சாதியம் என்பது வேறுபடுகளை உள்வாங்கி நிறுவனமாக்கப்பட்ட ஒரு படிநிலை அமைப்பு. இது 3000 ஆண்டுகளாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

சாதிய வேறுபாடுகள் என்பது பல்வேறு சாதிகளுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகள். ஆனால் தீண்டாமை என்பது தலித் மக்களை மட்டுமே பாதிக்கக்கூடிய ஒன்று. இது தீட்டு. அசுத்தம் என்ற கருத்தியலின் அடிப்படையில் தலித் மக்களை ஒதுக்கி வைக்கின்றது. இந்தியாவில் மற்ற சாதியினரிடம் சாதி வேறுபாடு இருந்தாலும் தீட்டு. அசுத்தம் என்ற கோட்பாடு நிலவுவதில்லை.

அரசியல் சாசனம் 17 வது பிரிவு தீண்டாமை ஒழிப்பை பற்றி பேசுகிறதே தவிர சாதி ஒழிப்பைப் பற்றி பேசவில்லை. அவ்வாறு அரசியல் சாசனம் பிரிவுகள் 15, 16 சாதி பாகுபாடுகள் பற்றி பேசுகிறது சாதி ஒழிப்பைப் பற்றி பேசவில்லை. ஆக, சட்டப்படி இந்தியாவில் சாதியம் இன்னும் ஒழிக்கப்படவில்லை. இந்நிலையில் முதலில் ஒழிக்கப்பட வேண்டியது தீண்டாமை.

தீண்டாமை பற்றியும் அதற்கு பலியாகும் தலித் மக்களைப்பற்றியும் இவ்வரங்கில் விவாதித்து செயல்திட்டம் தீட்டுவது அவசியமானதும் முதன்மையானதுமாகும்.



படிப்பகம்

www.padippakam.com



# தப்பு

சிறுகதை

— பெரணமல்லூர் சேகரன்.

முதன் முதலாக நாற்காலியில்...... அதுவும் சப்கலெக்டர் ஆபீஸின் நாற்காலியில்.... அதுவும் அவர் நாற்காலியின் எதிரில் வரிசையாகப் போடப்பட்டிருந்த நாற்காலியில்.... அதுவும் முதல் வரிசையில்.... சோக்குவிற்கு இருப்பு கொள்ளவில்லை. மூன்றாவது நாற்காலியில் உட்கார்ந்திருந்த சொக்க நாதனையே பார்த்துக் கொண்டி ருந்தான். சொக்கநாதன் கையமர்த்தி சைகையால் பொறுமையாக இருக்கும்படி கேட்டுக் கொண்டான். இளைஞனான சொக்க நாதன் இப்போது இவர்களுக்கு வழிகாட்டி சேரியில் அதிகமாக படித்து ஐ.ஏ.எஸ் தேர்ச்சி பெற்று சப்கலெக்டர் ட்ரெயினிங் உத்திரவை எதிர் நோக்கியிருக்கும் நிலையில் பெருமிதம் இருக்காதா என்ன? சொந்தப் பிள்ளையாய் தூக்கி வளர்த்த சொக்கநாதனை தன் எதிர் நாற்காலியில் இருத்தி சப்கலெக்டர் ஆக்கி கனவு கண்டார் சோக்கு. சலசலப்பு செவிகளில் பாய்ந்திட உட்கார்ந்திருந்த ஐந்துபேரும் எழுந்து நின்றனர். சப்கலெக்டர் கண்ணாடியை உயர்த்தி பார்த்தவாறு புன்ன கைத்துக்கொண்டே உள்ளே வர சற்று இடையில் பத்துபேர் வந்தார்கள். சோக்கு, சொக்கநாதன், அப்பு, கண்ணன், தின்னு என்ற ஐந்துபேர் முகமும் சுருங்கியது. அளவில் வேண்டுமென்றால் சொக்கநாதனுக்கு குறைந்திருக் கலாம் இப்படியெல்லாம் ஊர் நாட்டாமைகள் அதிகாரிகளை வீட்டில் பார்க்ககூடவே வருவார்கள் என்பது அவனறிந்த விஷயம்தான். சப்கலெக்டரின் எதிர் திசையில் சேரி மக்கள் உட்கார்ந் திருந்தாலும் அவர்களை பார்க்காமல் பக்கத்தில் இரண்டு வரிசைகளில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்திருந்த சாதி இந்துக்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு திரும்பினார் சப்கலெக்டர். அவர்கள் பார்ப்பதை அவர்களோடு பேசுவதையே அருவருப்பாக நினைப்பவர் அவர். கடந்த பேச்சு வார்த்தையில் நிறக வைத்தே பேசி புத்திமதி சொல்லி அனுப்பிவைத்தவர். உட்கார்ந்துபடி ஊர் பிரமுகர்கள் இறுமாப்புடன் கிண்டலடித்து ஏகடியம் பேசியது சோக்குவுக்கு பசுமரத்தாணியாய் நினைவுக்கு வந்தது. உங்கள் பரம்பரை தொழில் பறையடிக்கிறது. அடிக்கவேண்டியதுதானே...... அதுவும் மாரியம்மன் கோயில் திருவிழாவில் பறையடிக்கிறதுக்கு கசக்குதா....? பேச்சுவார்த்தை துவங் கவே தன் நிலைக்கு மீண்டார் சோக்கு

ம்..... வந்த விஷயத்தை சொல்லுங்க.. பீடிகை போட்டார் சப்கலெக்டர். பேச்சுவார்த்தைக்கு நீங்கதானே.... நீங்களே சொல்லுங்க...... பேசிய சொக்கநாதனை ஒரு பார்வைப் பார்த்துவிட்டு கடுப்பாகிப் போனார் சப்கலெக்டர். ஓஹோ நீதான் சொக்கநாதனா... நல்லா இருந்தவங்களை கெடுத்து... சம்பிரதாயங்களை குழி தோண்டி புதைச்சி கிராமத்தில கலவரம் வெடிக்க தூண்டியது நீதானா....? ஸ்டாப்பிட்..... முதல்ல நாகரிகமாக பேச கத்துக்குங்க... ஐ.ஏ.எஸ். ட்ரெயினிங்கல இதுதான் சொல்லி கொடுத்தாங் கலா...? போனதரம் மாதிரியே இவங்களை நிக்கவச்சி பேசி அடிமையா நடத்தி கட்டப் பஞ்சாயத்து பண்ண முடியாது. உறுதியாய் கணீரென சொக்க நாதன் சொன்னதும் என்னவோ போலாகிவிட்டது. இவன் ஐ.ஏ.எஸ். ட்ரெயினிங் முடித்தவன் என்பது சப்கலெக்டருக்கு உறைத்தது. சரி ஊர்ப் பஞ்சாயத்துல தீர்மானம் போட்டுக் குடுத்திருக் காங்க இவங்க .... வழக்கமான திருவிழாக்கள்ல அடிக்கிற மாதிரி ஆடித் திருவிழாவிலயும் பறமேளம் அடிச்சி பிரச்சனை யில்லாம பார்த்துக்குங்க.. இதுதான் இவங்க விருப்பம். இதுதான் தீர்மான நகல். ஒரு தாளை சப்கலெக்டர் நீட்ட அதை வாங்கிப் படித்துப் பார்த்தான் சொக்கநாதன். முகம் மாறியது. காலனி சார்பில் வார்டு மெம்பர் பெருமாள் எப்படி கையெழுத்துப் போட்டி ருப்பான் என்று உறுத்தியது. பக்கத்தில் கண்ணனிடம் காட்டி காதில் கிசுகிசுத்தான். தலை யசைத்து மறுத்தான் கண்ணன். தம்பியின் கையெழுத்து அண்ணனுக்கு தெரியாதா என்ன? உஷாரானான் சொக்கநாதன்.

சார் ஒரு விசயம். இதில் பெருமாளுனு கையெழுத்து போட்டிருக்கிறது நிஜமில்ல.. போலி.. யெஸ்... போர்ஜெரி... இதுக்கே நீங்க அவங்கபேர்ல நடவடிக்கை எடுக்கணும். கிரிமினல் பேர்வழிங்க. இடைமறித்துக் கூச்சலிட்டனர் சாதி இந்துக்கள். மீசையை முறுக்கினான் பஞ்சாத்துத் தலைவர். உண்மை கசக்கத்தான் செய்யும். ஏன் மௌன மாயிட்டீங்க?சப்கலெக்டர் பார் வையால் சொக்கநாதனையே சுட்டார்.... தோ பாருங்க.. அது அவர் கையெழுத்தே இல்லன்னாலும் மத்தவங்க மெஜாரிட்டி கையெழுத்து போட்டிருக் காங்கல்ல... தீர்மானம் போட்டத அமல்படுத்த வேணாமா? சார்.... எங்கள பிரதிநிதித்துவப் படுத்துறது பெருமாள்... ஒரு மெம்பர்தான். அவர் கையெழுத்தில்லாததை நாங்க ஏத்துக்க முடியாது. எல்லாந் தெரிஞ்சி நடிக்கிறீங்க... இருந்தாலும் சொல்றேன்.. ஊர்ப்பையன் ராஜாராமும் எங்க சேரிப்பெண் ராணியும் மனம் விரும்பி ஓடிப்போனது எல்லோருக்கும் தெரிஞ்சதே. ரெண்டுபேரும் ஒருத்தரையொருத்தர் நேசிக்கிறாங்க. எப்படியோ பொழச்சிப்போகட்டும்னு நாங்க விட்டுட்டோம். ஆனா, இந்தப் பெரியவங்க அவங்களைக் கண்டுபிடிச்சி ரெண்டே நாள்ல பிரிச்சிட்டாங்க... எத்தனை கேஸ் குடுத்தும் எவ்வளவு போராடியும் காவல் துறையும், அதிகாரிகளும் அவங்க சைடாயிட்டாங்க. பணம் பாதாளம் வரை பாயுதில்ல... இந்த நிலையில் நாங்க தன்மானத்தோட சுய கவுரவத்தோட வாழ வேணாமா.. எப்ப எங்கள அவமரியாதை பண்ணி அந்தப் பொண்ண மட்டும் அடிச்சுத் துரத்தி நிர்கதியாவிட்டாங்களோ... இனி எங்களுக்கும் அவங்களுக்கும் என்ன



படிப்பகம்


www.padippakam.com

இருக்கு..? இங்க சாதி வெறி கொழுந்துவிட்டு எரியுது. அதிகாரிகளும், சுயநல அரசியல்வாதிகளும், காவல் துறையும் எரியுற நெருப்புல நெய்யை ஊத்துறாங்க. பொறுக்க முடியாமல் சாதி இந்துக்கள் கூச்சலிட சப்கலெக்டரும் குறுக்கிட்டு... என்னதான் சொல்லவரு..? எங்க முடிவு உறுதி யானதுதான் நாங்க ஊர்த் திருவிழாவுல மேளம் அடிக்க முடியாது. எங்கள கவுரவப்படுத்த பல ஊர் இன்னிக்குத் துயாராகிவிட்டது. பற மேளமா. இல்ல தப்பாட்டம் எங்க ஊர் செட் அரங்கேரப்போகுது. இன்னும் சொல்லபோனா இவங்க நடத்தப்போற திருவிழா நாளான ஆடி 10 ம் தேதி திருவண்ணாமலை எழுத்தாளர் சங்க மேடையில் எங்க தப்பாட்டம் வித்தியாசமான கலையம்சத்தோட அரங்கேரப் போகுது. சப்கலெக்டர் சொக்க நாதனிடம் கை நீட்டிஇதனால் உனக்கும் பிரச்சனை, சேரிக்கும் பிரச்சனை..... ஒழுங்கா என்னைப்போல ஒரு சப்கலெக்டரா வரனும்னு ஆசைப்பட்டா போலீஸ்ல எந்த ரிமார்க்கும் இல்லாம வாலை மடக்கிட்டு உன் வேலையை பாரு... அமைதியா இருந்த இவங்களை தூண்டிவிடாதே. மற்ற நால்வரையும் விரல் நீட்டி பேசிய சமயத்தில் நால்வரும் பார்வையால் சுட்டார்கள் சப்கலெக்டரை விருட்டென்று எழுந்த நால்வரும்.... சொக்கநாதா... இங்க எந்த நீதி நியாமும் கிடைக்காது நேத்து போலீஸ் ஸ்டேஷன்ல பார்த்துமில்ல. கட்ட பஞ்சாயத்தை.... நீ வா போவோம். இன்னொருதரம் நம்ம ட்ருப்புக்கு ரிகல்சராவது தரலாம். சேரிக்குள் இதற்கென்று ஒரு சிறு குடிசையை போட்டிருந்தான் சொக்கநாதன். குடிசையை நெருங்க நெருங்க அற்புதமான... விதவிதமான.... தப்பாட்ட ஒலி கேட்டது.

ஐவரின் முகத்திலும் புன்னகை பூத்தது. நம்பிக்கை நங்கூர மிட்டது. முச்சிரைக்க ஓடிவந்த வெட்டியான் சொக்கநாதனை பார்த்தபடி அவசர அவசரமாக வார்த்தைகளை விழுங்கினான்.. தம்பி........... திருவண்ணாமலைக்கு நாம போவதை தடுக்கபோறாங்களாம் சாதி நாட்டானுங்க... ரகசியமாய் பேசிக்கிட்டுக்கிருந்தாங்க... இதுக்கு தனியே மாமூல்கூட போலிஸ்ல குடுத்திருக் காங்கலாம். வெட்டியான் தோளை தட்டிய சொக்கநாதனின் பார்வையால் தைரியம் பெற்று ஐவரும் அப்பால் நகர்ந்தனர். ஆடி 10ஆம் தேதி ஊரெங்கும் வேப்பிலைத் தோரணங்கள் தெருவுக்குத் தெரு விதவிதமாய் தோர ணங்கள்..... வெடிகள் தூள் கிளப்பின. ஒலி பெருக்கிகள் சினிமாப் பாடல்களை முழங்கிக்கொண்டிருந்தன. அதிகாலை, இந்நேரம் ஊர் முழுசுக பறை மேளம் ஒலித்திருக்கவேண்டும். பெரிசுகளின் கருத்து தெரிந்த காலம் வரை பறைமேளம் இன்றி கோவில் திருவிழா நடந்ததில்லை என்னதான் ஆடம்பர ஏற்பாடுகள் செய்திருந்தபோதும் களை இழந்திருந்தது கிராமம். மக்கள் வெள்ளத்தை பார்த்ததில் மகிழ்ச்சி பிரவாகத்தில் திளைத்தனர்.

சொக்கநாதனும், சேரி மக்களும். மனிதக் கடலின் மத்தியில் திறந்த அரங்கமாய் அமையப் பெற்றிருந்த மேடை..... எளிமையாக அதே சமயம் நேர்த்தியாக.... எப்போதும் கண்டிராத காட்சியாக..... தப்பாட்ட கலைஞர்கள் புளங்காகிதம் அடைந்தனர். தாம் கொடுத்த கடும் பயிற்சிக்கு அங்கீகாரம் கிடைக்குமா? என்ற சந்தேகம் மனதுக்குள் ஓரமாக அரித்துக்கொண்டிருந்தது சொக்கநாதனுக்கு. எந்த நேரமும் அழைக்க வரலாம் என சீருடையில் துயாராக இருந்தார்கள் தப்பாட்ட கலைஞர்கள்.

திருவண்ணாமலை கலைஞர்கள் இவர்களை வரவேற்ற விதமும், இவர்களுக்கு கொடுக்கப்பட்ட மதிப்பும், மரியாதையும் ... மகிழ்வின் உச்சியில் இதற்கெல்லாம் சூத்திரதாரியான சொக்கநாதனை நினைத்துக்



கொண்டார்கள்.

திருவிழாக்களில் சாவு நிகழ்ச்சிகளில் 10 க்கும் 20க்கும், சாராயத்திற்கும் பறைய டித்திருந்த ஆட்களை இந்த அளவுக்கு துயார்ப்படுத்தி தப்பாட்ட கலைஞர்களாக ஜொலிக்க வைத்தது சொக்கநாதன்தான். நாகரீகமாக உடையணிந்து சாதி இந்துக் களின் சவாலை எதிர்க் கொண்டது.... காவல்துறையும், அதிகாரிகளும் கைகோர்த்துக் கொண்டு கொடுத்த தொந்திர வுகளை எதிர்க் கொண்டது. இந்த நிகழ்ச்சிக்கு புறப்படும் போது தகறாரு செய்ய சாதி இந்துக்கள் முனைந்தது, சொக்கநாதன் திட்டமிட்டு வரவழைத்திருந்த பல ஊர்க் கலைஞர்கள் மூலம் பாதுகாப்பாய் வந்து சேர்ந்தது என அலை அலையாய் எண்ணங்கள் வந்து போயின கலைஞர்களுக்கு. எதிர்பாராத விதமாய் இவர்களின் நிகழ்ச்சி முதலிலேயே வந்தது. பெருங் கூட்டம் இருக்கும்போதே மேடை ஏறுவதில் மகிழ்ச்சிதானே.... நிகழ்ச்சியின் தலைவர் தப்பாட்டத்தை அறிமுகப்படுத்தி கலைஞர்களையும் அவர்களின் வழிகாட்டி சொக்கநாதனையும் அறிமுகப்படுத்திட மேடையில் நிறைந்தனர். தப்பின் மூலமாகவே மக்களுக்கு வணக்கம் செலுத்தி பல அம்சங்களில் தப்பாட்டத்தை விதவிதமாய் அரங்கேற்றினர் கலைஞர்கள். பத்து நாட்களாய் சொக்கநாதன் கொடுத்த பயிற்சி பயிர் நல்ல விளைச்சலை மேடையில் தந்து கொண்டி ருந்தது. பல கோணங்களில் வித்தியாசமாய் சுழன்று சுழன்று அவர்கள் ஆடிய தப்பாட்ட மழையில் நனைந்த நகர மக்களும், சுத்துபட்டு கிராம மக்களும் இந்நிகழ்ச்சியின் இறுதியில் ஒட்டு மொத்த கரவொலியால் அதிர்ந்தது நகரம் மட்டுமல்ல... பல மைல் தொலைவில் கிராமத்து மாரியம்மன் திருவிழாவில் தண்ணீரில் மிதந்து கொண்டி ருந்த சாதிநாட்டாமை களும்தான். என்னடா அதுக்குப்பேரு தப்பாம் தப்பு.... என்ன கிழிக்க போறானுங்க. சொக்கநாதப்பய திட்டம்போட்டு நம்ம கண்ல மண்ணைத் தூவிட்டு அவனு களைக் கூட்டிப் போயிட் டான்ல..வரட்டும் பாத்துக்கு வோம்.....வழக்கம்போல் தப்பான பாதையில் பயணித்துக் கொண்டிருந்தார்கள் சாதி நாட்டாமைகள்.



படிப்பகம்

www.padippakam.com

## உழைப்பாளி!

உழைத்துக்கொண்டுதான்
இருக்கிறோம்
வாழையடி வாழையாக
கோழையாக

சுதந்திர இந்தியாவை
சுரண்டிகொண்டிருப்பது
ஊழல் பெருச்சாலிகள்
என்றாலும்
உருகுலைந்துப் போவது
என்னவோ
உழைப்பவன் மட்டும்தான்

உழும் நிலத்தால்
எங்கள் உழக்குக்கூட
மிஞ்சவில்லை
பாவி வயிற்றைப்
பட்டினிப்போட்டே
பழகிவிட்டோம்

எங்கள் புலம்பல்
கேட்டு அந்தக்
கோட்டையின் பூட்டு
இன்னும் திறக்கவில்லை
வேட்டு வைத்து
தகர்த்திடவும்
எங்களுக்கு காலம்
வரும்!!

ஆனால்
உழைத்துக்கொண்டுதான்
இருக்கிறோம்!!

**கவிபாரதி**
**சென்னை.**

**ஓ!........ மனிதர்களே...**

தன்னால் முடியாததைத் தரக்
குறைவாய் எண்ணியதை
உன்னை செய்யச் சொன்னான்
உதவியாய் செய்யச் சொன்னான்!
உதவியாய் செய்யச்சொல்லிபின்
உதைப்பேன் என்று சொல்லி
மதர்ப்பாய் நின்றபோது
சிதைந்தது மனிதாபிமானம்
மண்ணுலகில் பிறந்தோரெல்லாம்
மனிதர்தாம் என்றாலும் மண்
குடிசைதனில் பிறந்திட்டதனால்
குடியில் தாழ்ந்தோரென்றீரோ ?
நீ கும்பிடும் தெய்வமெல்லாம்
கூடிவந்து சொல்லிடுமோ ?
வெம்பிடும் மனதினிலே வேல்கொண்டு
பாய்ச்சாமல் சிந்திப்பீர் மனிதர்களே!
தீண்டாமை ஒரு பாவம்
தீர்த்திடுவோம் இந்தச் சாபம்.

சரவணபாண்டியன்
சென்னை

# கவிதைகள்!

## களம் பத்திரிக்கை

களம் காணும் காளைகளே
கதிரவனாய்
உங்கள் கையில்
களம் வரும்!
இளம் மனதை
தட்டி எழுப்பும்
சாதிக்கதவை
எட்டி உதைக்கும்
சமூக துரோகியை
சுட்டெரிக்கும்
சுடர்விட்டு
இருளை விரட்ட
வலம் வரும்
இந்தக் களம்
இதுதான் போர்க்களம்.

*ஜே.ஏ. சாமி*
*மண்டேலா நகர் ,மதுரை*

## புரட்சி செய்!

மனிதா! மனிதா!
மதம் மதம் என
மதம் பிடிக்காதே
மனிதம் என கற்பி!

சமூகமே
சாதி சாதியென
சமூகத்தை
சதி செய்யதே
சமுதாயமென ஒன்றுசேர்!

இளைய தலித்
இளைஞனே
இச்சமூகத்தை
சீர் செய்
புரட்சி செய்!!

# மாணவர் களம்!



திமலை மாவட்டம் அரையாளம் IACM இரவுப்பள்ளி

**களம் ஆண்டு சந்தா ரூ. 60 மட்டும்!**

*வாங்கி விட்டீர்களா ? களம் அனைத்துக் கடைகளிலும் கிடைக்கும்.*

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாக்களை புதுப்பித்துக்கொள்ளவும் – நிர்வாகி



படிப்பகம்

www.padippakam.com

10 ம் பக்க தொடர்ச்சி

இவர் ஒரு தலித்! ஆனால் வேலு படையாச்சியின் கைப்பொம்மையாகவே இவர் செயல் பட்டுக்கொண்டிருக் கின்றார். தன்னை மீறி ஊராட்சி மன்ற தலைவர் ஏதாவது செய்ய நினைத்தால் தலையை எடுத்து விடுவேன் என்றும், அரசாங்கமே என் பாக்கெட்டுக்குள்தான் என்னை எவனும் ஒன்னும் அசைத்துக்கூட பார்க்க முடியாது என்று மிரட்டி அடக்கி வைத்திருக்கின்றார். முத்துலிங்கம் என்பவர் ஆண்டிக்குழி தலித் மக்கள் சுமார் 600 பேர்தான் இருக்கோம் எங்களைச் சுற்றி ஆண்டிக்குழி படையாச்சிகள் 1000



சிகாமணி ஊமத

குடும்பங்களும் கள்ளமேடு படையாச்சிகள் சுமார் 2500 குடும்பங்களும் உள்ளன. நாங்க நடுவுல இருக்கிறதால எங்களால அவங்கள மீறி ஒன்னும் செய்ய முடியல அதையும்மீறி நாங்க ஏதாவது செய்தால் எங்கள உண்டு இல்லையினு ஆக்கிடுவாங்க . பல வருஷமா நாங்க அவங்களுக்கு அடிமையாதான் வாழ்ந்து வருகின்றோம். நீதி மன்றத்தை அவமதிக்கிற அளவுக்கு தைரியமுள்ள ஆளோட நாங்க எப்படிங்க போட்டிபோடறது எனப் புலம்புகின்றனர். கூறுகின்றார். ஏறக்குறைய 10 ஆண்டு களுக்கு முன்னர்



முத்துலிங்கம்

வழங்கப் பட்ட பட்டா நீதிமன்றம் தலையிட்ட பிறகும் எதையும் பொருட்படுத்தாமல் தன்னிச்சையாக செயல்பட்டு வரும் சாதி இந்துவான வேலு படையாச்சிக்கு தக்க தண்டணையை பெற்றுத் தராமல் சட்டம் என்ன பூவையா பறித்துக்கொண்டிருக்கின்றது?.

– கோட்டைபாபு

7ம் பக்க தொடர்ச்சி......

தன்னுடைய பஞ்சாயத்தில் உள்ள ஒரு நிறுவனமாயிற்றே என்பதற்காக எம்.ஜி.எம் நிறுவனத்துடன் சமரசம் செய்துகொள்ளவில்லை. இரவு, பகலென்று பாராமல் நாள் முழுவதும் தன்னுடைய பஞ்சாயத்திற்கும் பொது நலனுக்கும் அலைந்துகொண்டிருக்கும் தலைவர் அசோகனை பல முறை நேரில் சந்திக்க தொடர்பு கொண்டும் பல நாட்கள் கழித்து அவர்முன் நாம் ஆஜரானோம். பஞ்சாயத்து தலைவர் என்பது மக்களுக்கு சேவை செய்ய எனக்கு கிடைக்கப்பெற்ற ஒரு நல்ல வாய்ப்பு இந்த நல்ல வாய்ப்பை எவ்வளவு பயன்படுத்திக்கொண்டேன் என்பதை நீங்கள் மக்களிடமே கேட்டுத் தெரிந்துக்கொள்ளுங்கள் என்றார். அவர்கள் நல்லது சொன்னாலும், கெட்டது சொன்னாலும் சரி அதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். மக்கள் என்னை நம்புகிறார்கள் அதனால் அவர்களுக்கு அதிகமாக சேவை செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய பதவி காலங்களில் பல சவால்களை; சந்தித்திருக்கின்றேன் பொது சேவை என்றால் இதெல்லாம் சகஜம்தான் என எளிமையாக எந்தவொரு பந்தா இல்லாமல் நம்முடைய பல கேள்விகளுக்கு பதில் கூறினார் தலைவர் அசோகன்.

தங்களுடைய பஞ்சாயத்தை ஒரு மாதிரி பஞ்சாயத்தாக மாற்றி காண்பித்துள்ள தலைவர் அசோகன் மீண்டும் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என முட்டுக்காடு பஞ்சாயத்திலுள்ள பலரும் தங்களுடைய விருப்பமாக தெரிவிக்கின்றனர். தலைவரால் தங்கள் வாழ்நாளில், தங்கள் கண்முன்னே கண்ட பல நல்ல மாற்றங்களை இப்பகுதி மக்கள் மனங்குளிர சொல்கிறார்கள். மக்கள் செல்வாக்கே தலைவர் அசோகனுக்கு நிறைவானதாகவும், பலமுள்ளதாகவும் இருந்துகொண்டு வருகிறது.

– சிந்தை ஆர்

## சமத்துவ நகர்

மத்திய அரசின் கூட்டுக் குடிநீர்த்திட்டத்தின் கீழ் ரூ. 35 லட்சம் பெறப்பட்டு பஞ்சாயத்து முழவதற்கும் குடிநீர் தட்டுப்பாடில்லாமல் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் எளிதாகக் கிடைக்கக்கூடியதாக இல்லையென்றாலும் தலைவருடைய விடாமுயற்சியால் கிடைத்துள்ளது.

நபார்டு திட்டத்தின் கீழ் ரூ. 17 லட்சம் பெற்று ஏகாட்டூர் கிராமத்தில் சுமார் 2 கி.மீ தொலைவிற்கு தார் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவராக இறையன்பு இருந்த நேரத்தில் தனியாருக்கு சொந்தமான நிலத்தில் பொது மக்கள் வீடுகட்டி வசிப்பதாக கூறி 300 வீடுகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அரசு உட்பட யாரும் கண்டுக்கொள்ளாத நிலையில் தன்னுடைய சொந்த முயற்சியில் சுமார் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் வீடு இழந்தவர்களுக்கு நிலம் ஒதுக்கி சமத்துவ நகர் ஒன்றை உருவாக்கினார்.



படிப்பகம்

www.padippakam.com

டர்பன் நகரில் நடந்த இனவெறி எதிர்ப்பு உச்சி மாநாடு அனைவரும் அறிந்ததே. இந்த மாநாட்டில் தீண்டாமைப்பற்றியும் சாதிவெறிபற்றியும் விவாதிக்க வேண்டும் என்று அகில உலக டாக்டர் அம்பேத்கர் நுற்றாண்டு இயக்கம் உட்பட பல்வேறு தலித் அமைப்புகள் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கைகளைத் துவக்கம் முதலே எதிர்த்த இந்தியஅரசு ஐ.நா மாநாட்டில் விவாதிப்பதற்கு முட்டுக்கட்டையாகவே இருந்துவந்தது.

டர்பனில் நடைபெற்ற மாநாட்டில் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் நிறுவனர் எல். யேசுமரியான் அவர்கள் கலந்து கொண்டு மத்திய அரசின் மறைமுக திட்டத்திற்கு எதிராக குரல் கொடுத்துவிட்டு செப்டம்பர் 14 ம் தேதி தாயகம் திரும்பினார்.

ஐயா அவர்களின் இந்த வெற்றி பயணத்திற்கு பாராட்டுதல் தெரிவிக்க 16.09.2001 அன்று செங்கையில் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது. மாநிலத் தலைவர் ப. அசோகன் தலைமையில் பொதுச்செயலாளர் எஸ்.ஆர். மோகன் ஏற்பாடு செய்திருந்த இந்த கூட்டத்தில் சுமார் 250 நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.



*மாநில செயற்குழுவின் தீர்மானங்கள்*

1. டர்பன் உச்சி மாநாட்டில் இந்திய அரசு மேற்கொண்ட நிலைபாட்டை மாநில செயற்குழு கண்டிக்கின்றது.
2. தலித் உரிமை வலியுறுத்திய இந்திய தேசிய மனித உரிமை ஆணையத்தைப் பாராட்டுகிறது.
3. டர்பன் உச்சி மாநாட்டில் தீண்டாமைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று மாநாட்டில் பேசிய நிறுவனர் ஐயா அவர்களை இச்செயற்குழு வாழ்த்துகிறது.





பெண்ணுரிமையைப் பேணி வளர்ப்போம் என்ற IACM–ன் கொள்கைபடி அன்னை தையற்பள்ளியின் எட்டாம் ஆண்டு நிறைவு விழாவும், பட்டமளிப்பு விழாவும் செங்கல்பட்டில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் பள்ளியின் இயக்குநர் வழக்குரைஞர் எல். யேசுமரியான் பேசுகையில் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட பெண்கள் உரிமைக்காக மற்ற பெண்கள் அனைவரும் போராடவேண்டும் என்று வலியுறுத்தினார். விழாவை துணை இயக்குநர் எம்.ஜெ. நாயகம் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். முடிவில் தையல் ஆசிரியை அருந்ததி அவர்கள் நன்றி கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

October-2001-Makkal Kalam. Regd.No. TN/PR Chief PMG 773/2001

# மக்கள் களம்




## டர்பனில் உரிமைப் போராட்டங்கள்

Published by Gopinathan, 67, Canal Street, Chennai - 600 021. Printed by M. Navaneetham at Navajothi Achagam, Chennai - 600 002

படிப்பகம்